بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 36

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

14 முஹர்ரம் 1442 ஹிஜ்ரி கமரி 03 தபூக் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி
03 செப்டம்பர் 2020


## அல்லாஹ்வின் கட்டளை

اَلَمْ تَرَ اِلَى الَّذِيْنَ يُزَكُّوْنَ اَنْفُسَهُمْ ؕ بَلِ اللّٰهُ يُزَكِّيْ مَنْ يَّشَآءُ وَلَا يُظْلَمُوْنَ فَتِيْلًا ○

தங்களைத் தாங்களே தூயவர்கள் என்று கருதுபவர்களின் நிலை உமக்குத் தெரியாதா? ஆனால் அல்லாஹ்வே, தான் விரும்புகின்றவரைத் தூய்மையாக்குகிறான். அவர்களுக்கு இம்மியளவு கூட அநீதி இழைக்கப்பட மாட்டாது. (4:50)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**இவ்வுலக மற்றும் தற்காலிக வெற்றிகளின் மீது இந்த அளவிற்கு மகிழ்ச்சி கொள்ளாதீர்கள். உண்மையான வெற்றியிலிருந்து நீங்கள் மிக தொலைவில் சென்றுவிடக்கூடிய அளவிற்கு மகிழ்ச்சி அடையாதீர்கள். மாறாக அந்த வெற்றிகளை இறைவனை அடையாளம் காண்பதற்கான ஒரு காரணியாக கருதுங்கள். தன்னுடைய தைரியம் மற்றும் முயற்சிகளின் மீது பெருமை கொள்ளாதீர்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### உலக வெற்றிகள் மற்றும் மகிழ்ச்சிகள் நிரந்தரமானவை அல்ல

மனிதனின் அனைத்து விதமான வெற்றியின் சந்தர்ப்பத்தின்போதும் ஒரு மகிழ்ச்சி ஏற்படுகின்றது. திருக்குர்ஆனிலிருந்து கேளிக்கை, பொழுதுபோக்கு, தற்பெருமை ஆகிய மூன்று விதமான மகிழ்ச்சிகள் தெரிய வருகின்றது. கேளிக்கையில் உணவு வகை பொருள்கள் அடங்கும். பொழுதுபோக்கில் திருமணம் போன்ற மகிழ்ச்சிகள் அடங்கும். தற்பெருமையில் செல்வம் போன்றவற்றின் மகிழ்ச்சிகள் அடங்கும்.

இதுவே மூன்று விதமான மகிழ்ச்சிகள் ஆகும். இதற்கு அப்பால் எந்த ஒரு மகிழ்ச்சியும் இல்லை. ஆனால் நினைவில் கொள்ளுங்கள். வெற்றிகள் மற்றும் மகிழ்ச்சிகள் நிரந்தரமானவை அல்ல. மாறாக, அவைகளுடன் ஒன்றிவிட்டால் மிகுந்த நஷ்டம் ஏற்படும். மேலும் மெல்ல மெல்ல அந்த மகிழ்ச்சிகள் கசப்பாக மாறக்கூடிய அந்த காலகட்டம் வந்துவிடும்.

உலகத்தின் வெற்றிகள் சோதனைகள் நிறைந்ததாகும். திருக்குர்ஆனில் இவ்வாறு வந்துள்ளது. அதாவது உங்களுள் எவர் சிறந்த செயல்களை உடையவர் என்பதைச் சோதிப்பதற்காக அவன் மரணத்தையும், வாழ்வையும் படைத்துள்ளான். (67:3)

வெற்றியும் தோல்வியும் வாழ்க்கை மற்றும் மரணத்தின் கேள்வியாக இருக்கின்றது. வெற்றியும் ஒருவிதமான வாழ்வாக இருக்கின்றது. எவருக்காவது தான் வெற்றிபெற்ற செய்தியை கேட்டால் அதில் அவர் உயிர் பெற்று விடுகிறார். மேலும் ஒரு விதமான வாழ்வு அவருக்கு கிடைக்கின்றது. அதேபோன்று தோல்வியின் செய்தி வந்தாலும் உயிருடன் இருக்கின்ற நிலையிலேயே மரணித்து விடுகின்றார். சில நேரங்களில் மிகவும் பலவீனமான உள்ளம் கொண்ட மனிதர்கள் உண்மையிலேயே மரணித்து விடுகின்றனர்.

இவ்விஷயத்தையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். சாதாரண வாழ்க்கை மற்றும் மரணம் ஒரு எளிதான விஷயம் ஆகும். ஆனால் நரக வாழ்க்கை மற்றும் மரணம் மிகவும் கடினமான ஒன்றாகும். நற்பேறு பெற்ற மனிதன் தோல்விக்குப் பிறகும் வெற்றி பெற்று இன்னும் நற்பாக்கியம் உடையவராக ஆகிவிடுகின்றார். மேலும் இறைவனின் மீதுள்ள அவரின் நம்பிக்கை அதிகரிக்கின்றது. என்னுடைய இறைவன் இப்படிப்பட்ட இறைவனா என்று அவன் சிந்திக்கும்போது அதில் அவனுக்கு ஒரு விதமான ரசனையும் ஏற்படுகிறது. அந்த உலக வெற்றிகள் இறைவனை அடையாளம் கண்டு கொள்வதற்கான ஒரு காரணியாக அமைகின்றது. அப்படிப்பட்ட மனிதர்களுக்காக இவ்வுலக வெற்றிகள் உண்மையான வெற்றிக்கான ஒரு வழிவகையாக இருக்கின்றது. (அதை இஸ்லாமிய சொல் வழக்கில் ஃபலாஹ் என்று கூறுவார்கள்).

நான் உங்களுக்கு உண்மையாகவே கூறுகிறேன். உண்மையான மன நிறைவு, உலகம் மற்றும் உலக பொருட்களில் ஒருபோதும் இல்லை. உண்மை என்னவென்றால், உலகிலுள்ள அனைத்து துறைகளையும் பார்த்துவிட்ட பிறகும் மனிதன் உண்மையான மற்றும் நிரந்தர மகிழ்ச்சியை பெறுவதில்லை. செல்வந்தர்கள் மற்றும் அதிகமாக செல்வம் வைத்திருப்பவர்கள் எந்நேரமும் மகிழ்ச்சியாக இருப்பதை நீங்கள் காண்கின்றீர்கள். ஆனால் அவர்களுடைய நிலை சொறி நாய்க்கு ஒப்பானதாகும். அதாவது அரிப்பு நோயாளியை போன்றதாகும். அவனுக்கு அரிப்பு ஏற்படும்போது சொறிந்தால் மிகவும் சுகமாக இருக்கும். ஆனால் அந்த அரிப்பின் இறுதியில் என்ன விளைவு ஏற்படுகிறது? இரத்தம்தான் வெளிவரும்.

ஆக இவ்வுலக மற்றும் தற்காலிக வெற்றிகளின் மீது இந்த அளவிற்கு மகிழ்ச்சி கொள்ளாதீர்கள். உண்மையான வெற்றியிலிருந்து நீங்கள் மிக தொலைவில் சென்றுவிடக்கூடிய அளவிற்கு மகிழ்ச்சி அடையாதீர்கள். மாறாக அந்த வெற்றிகளை இறைவனை அடையாளம் காண்பதற்கான ஒரு காரணியாக கருதுங்கள். தன்னுடைய தைரியம் மற்றும் முயற்சிகளின் மீது பெருமை கொள்ளாதீர்கள். மேலும் இந்த வெற்றி நம்முடைய தகுதி மற்றும் முயற்சியின் விளைவாகத்தான் கிடைத்தது என கருதாதீர்கள். மாறாக உண்மையான முயற்சியை ஒருபோதும் வீணாக்காத மேன்மேலும் கருணைகாட்டக்கூடிய அந்த இறைவன்தான் நம்முடைய முயற்சி மற்றும் உழைப்பை பலன் அளிக்கச் செய்தான் என்று எண்ணுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 134,135 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**உஹது போர் சந்தர்ப்பத்தின்போது ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எனது தாயும் தந்தையும் உங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக. நீங்கள் அம்பு எய்து கொண்டே செல்லுங்கள். ஆற்றல்மிக்க இளைஞரே! அம்பு எய்து கொண்டே செல்லுங்கள்**

**ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவரும், மக்காவின் காலகட்டத்தில் துன்பங்களை சகித்துக் கொண்டவரும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கக்கூடிய நற்பாக்கியத்தைப் பெற்றவரும், இஸ்லாத்திற்காகவும், கிலாஃபத்திற்காகவும் தன்மான உணர்வைக் வெளிப்படுத்தியவரும், இஸ்லாத்தின் குதிரை வீரர் என்று அழைக்கப்பட்டவரும், ஈராக்கை வெற்றி கொண்டவரும், பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியான ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**மதிப்பிற்குரிய முஹம்மது அக்ரம் பாஜ்வா சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய புஷ்ரா அக்ரம் சாஹிபா, பீர்கோட்டைச் சார்ந்த மதிப்பிற்குரிய இக்பால் அஹ்மது நாஸிர் சாஹிப், காஷ்மீரைச் சார்ந்த மதிப்பிற்குரிய முஹம்மது இப்ராஹீம் சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய குலாம் ஃபாத்திமா ஃபஹமிதா சாஹிபா, ஹைதராபாத்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய முஹம்மது அஹ்மது சாஹிப் மற்றும் சிரியாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய சலீம் ஹஸன் அல்ஜாபீ சாஹிப் ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துக் கூறி ஹுஸூர் அவர்கள் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 24 ஜுலை 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **24 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பு எடுத்துக் கூறப்பட்டு வந்தது. ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பத்ர், உஹது, அகழ், ஹுதைபிய்யா உடன்படிக்கை, கைபர் மற்றும் மக்கா வெற்றி ஆகிய அனைத்து போர்களிலும் கலந்து கொண்டிருந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிகவும் சிறந்த அம்பு எய்யும் நபர்களில் ஒருவர் ஆவார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத், தொகுதி 3 பக்கம் 105 சஅத் பின் அபீ வக்காஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களைப் பற்றி ஓர் அறிவிப்பில் இவ்வாறு வந்துள்ளது. அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கலந்து கொண்ட ஒரு போரின் சந்தர்ப்பத்தில் அன்னாருடன் ஹஸ்ரத் தல்ஹா மற்றும் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களைத் தவிர வேறு எவரும் உடன் இருக்கவில்லை.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஃபஸாயிலுஸ் சஹாபா, பாப் ஃபஸாயில் தல்ஹா வஸ்ஸுபைர், ஹதீஸ் எண் 2415)

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் போருக்காக புறப்படும்போது இருந்த நிலையைப் பற்றி எடுத்துக் கூறியவாறு கூறுகின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் போருக்காக புறப்படும்போது எங்களுடைய நிலையை எப்படிப்பட்டதாக இருந்ததென்றால் மரத்தின் இலைகளைத் தவிர வேறு எதுவும் உண்பதற்கு இருந்ததில்லை. எங்களில் ஒவ்வொருவரின் நிலைமையும் ஒட்டகத்தைப் போன்று அல்லது ஆட்டைப்போன்று அதனை கடித்து உண்ணக்கூடியதாக இருந்தது. அதாவது அந்த இலைகள் காய்ந்ததாக இருக்காது.

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. அன்னார் கூறுகின்றார்கள்: இந்த நாட்களில் எங்களின் உணவு புபூல் மரத்தின் இலைகளாக இருந்தது. இது முற்கள் நிறைந்த ஒரு வகையான மரமாகும்.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்), பாப் மனாகிப் சஅத் பின் அபீ வக்காஸ், ஹதீஸ் எண் 3728)

மேலும் அல்லாஹ்வின் வழியில் இரத்தம் சிந்திய முதல் மனிதர் ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்களே ஆவார்கள். மேலும் அல்லாஹ்வின் வழியில் அம்பு எய்த முதல் மனிதரும் அன்னாரே ஆவார்கள். இந்த சம்பவம் உபைதா பின் ஹாரிஸ் அவர்களின் படைப்பிரிவு தொடர்பானதாகும்.

(சுனன் இப்னு மாஜா... பாப் ஃபஸ்ல் சஅத் பின் அபீ வக்காஸ், ஹதீஸ் எண் 131 & அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 607 – பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துல் சஹாபா தொகுதி 3 பக்கம் 453 சஅத் பின் மாலிக் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதனைப் பற்றி குறிப்பிட்டவாறு சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இதனைப் பற்றிய சில குறிப்புகள் இதற்கு முன்பும் நான் எடுத்துக் கூறியுள்ளேன். இருப்பினும் இவர்கள் தொடர்பாக இங்கும் எடுத்துக் கூறி விடுகின்றேன்.

ரபீவுல் அவ்வல் மாதத்தின் ஆரம்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் தனது மிகவும் நெருக்கமான உறவினரான உபைதா பின் ஹாரிஸ் அவர்களின் தலைமையில் 60 நபர்களைக் கொண்ட ஒரு ஒட்டகப் படையை அனுப்பி வைத்தார்கள். இந்த படை அனுப்பப்பட்டதன் நோக்கம், குரைஷிகளின் திட்டங்களை அறிந்து கொள்வதாகும். ஹஸ்ரத் உபைதா பின் ஹாரிஸ் மற்றும் அவர்களுடன் வந்திருந்தவர்கள் சில மைல் தூரத்தை சென்றடைந்த பிறகு மக்கா மற்றும் மதீனாவிற்கு இடையே இருக்கின்ற சனீயத்துல் மரா என்ற இடத்தை சென்றடைந்தனர். பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தபோது இந்த இடம் வழியாகத்தான் ஹிஜ்ரத் செய்தார்கள்.

இவர்கள் அந்த இடத்தை அடைந்தபோது இக்ரிமா பின் அபூஜஹிலின் தலைமையில் குரைஷிகளின் சில இளைஞர்கள் அங்கு

முகாமிட்டிருப்பதைக் கண்டார்கள். இரு பிரிவினரும் ஒருவர் மற்றவரை எதிர்கொண்டனர். ஒருவர் மற்றவருக்கிடையில் அம்பும் எய்யப்பட்டது.

முஸ்லிம்களுக்கு பின்னால் ஏதேனும் மறைவான படை இருக்கின்றது என்ற எண்ணத்தில் இணை வைப்பவர்களின் படை முஸ்லிம்களை எதிர்கொள்வதிலிருந்து பின்வாங்கியது. முஸ்லிம்களும் அவர்களை பின்தொடரவில்லை. இருப்பினும் அந்த படையில் இருந்த மிக்தாத் பின் அம்ர் மற்றும் ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான் ஆகிய இருவரும் இக்ரிமா பின் அபூஜஹிலின் படையிலிருந்து ஓடி வந்து முஸ்லிம்களுடன் இணைந்தனர்.

இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: அதாவது இந்த இருவரும், சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து முஸ்லிம்களுடன் இணைந்து விட வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இணை வைப்பவர்களுடன் வந்திருந்தனர். ஏனென்றால் அவர்கள் உள்ளத்தால் முஸ்லிம்களாக இருந்தனர். எனினும் தமது பலவீனத்தின் காரணமாக குரைஷிகளை அவர்களால் எதிர்கொள்ள முடியாதவர்களாக இருந்தனர்.

(மஜ்மவுல் பல்தான், தொகுதி 2 பக்கம் 99,100 – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 328)

ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு ஜமாதிவுல் ஊலா மாதத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களின் தலைமையில் 8 முஹாஜிரீன்களைக் கொண்ட குழுவிற்கு அமீராக நியமித்து குரைஷிகளைப் பற்றிய செய்தியை சேகரித்து வருவதற்காக ஹர்ரார் என்ற இடத்திற்கு அனுப்பி வைத்தார்கள். இவர்கள் அங்கு சென்றடைந்தனர். ஆனால் எதிரிகளுடன் இவர்களுக்கு சண்டை ஏற்படவில்லை.

(மஜ்மவுல் பல்தான், தொகுதி 2 பக்கம் 400 – பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 329,330)

பிறகு அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்கள் செய்த போர் பற்றிய குறிப்பும் இருக்கின்றது. இது ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு ஜமாதிவுல் அவ்வல் மாதத்தில் நிகழ்ந்தது. இந்த போரில் ஹஸ்ரத் சஅத் அவர்களும் கலந்து கொண்டார்கள். இது பற்றியும் நான் இதற்கு முன்பு எடுத்துக் கூறியுள்ளேன். ஆனால் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்தின் ஒளியில் இங்கு சுருக்கமாக கூறி விடுகின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், குரைஷிகளின் செயல்பாடுகளைப் பற்றி அதிகமாக தெரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணினார்கள். ஏனென்றால் அவர்கள் தொடர்பான எல்லா விதமான தகவல்களும் உடனடியாக தமக்கு கிடைக்க வேண்டும். அதன் மூலம் மதீனா எல்லா விதமான உடனடி தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று கருதினார்கள்.

எனவே இந்த நோக்கத்திற்காக 8 முஹாஜிரீன்களைக் கொண்ட ஒரு குழுவை உருவாக்கினார்கள். மேலும் குரைஷிகளின் மறைவான எண்ணங்களைப் பற்றி தெரிந்து கொள்ளும் வகையில் இந்த குழுவில் குரைஷிகளின் பல்வேறு கோத்திரங்களைச் சார்ந்தவர்களை தேர்ந்தெடுத்தார்கள். மேலும் இந்த குழுவிற்கு தமது பெரியன்னை வழி சகோதரரான அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்களை அமீராக நியமித்தார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த குழுவை அனுப்பும்போது, நீங்கள் எங்கே செல்ல இருக்கின்றீர்கள்? எதற்காக செல்கின்றீர்கள்? என்பதைக் கூட தெரிவிக்கவில்லை. மாறாக, புறப்படும்போது அவர்களின் கையில் மூடப்பட்டிருந்த ஒரு கடிதத்தை கொடுத்தார்கள். மேலும், இந்த கடிதத்தில் உங்களுக்கான வழிகாட்டல் இருக்கின்றது. நீங்கள் மதீனாவிலிருந்து இரண்டு நாட்களுக்கான பயண தூரத்தை கடந்த பிறகு இந்த கடிதத்தை திறந்து பார்த்து இந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டலுக்கேற்ப செயல்படவும் என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும் இரண்டு நாட்களுக்கான பயண தூரத்தை கடந்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்களின் கூற்றிற்கேற்ப அந்த கடிதத்தை அவர்கள் திறந்து பார்த்தார்கள். அந்த கடிதத்தில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது. அதாவது மக்கா மற்றும் தாயிஃபிற்கு இடையே இருக்கின்ற நஹ்லா பள்ளத்தாக்கிற்கு செல்லுங்கள். மேலும் அங்கு சென்று குரைஷிகளைப் பற்றிய செய்தியை தெரிந்து கொள்ளுங்கள். பிறகு அதைப் பற்றி நமக்கு தெரியப்படுத்துங்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த கடிதத்தின் கீழ் பகுதியில் இவ்வாறும் வழிகாட்டி இருந்தார்கள். அதாவது, இந்த திட்டத்தைப் பற்றி உங்களுக்கு தெரிந்த பிறகு உங்களில் எவராவது இதிலிருந்து திரும்பி வர விரும்பினால் அவருக்கு திரும்பி வர அனுமதி வழங்கவும் என்று எழுதப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் இந்த வழிகாட்டலை தம்முடன் வந்தவர்களுக்கு தெரியப்படுத்திபோது அவர்கள் அனைவரும் ஒருமித்த குரலில், நாங்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் இந்த தொண்டிற்காக ஆயத்தமாக இருக்கின்றோம். எங்களில் எவரும் திரும்பிச் செல்ல மாட்டோம் என்று கூறினர்.

இதற்குப் பிறகு இந்த குழு நஹ்லா பள்ளத்தாக்கை நோக்கி சென்றது. வழியில் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் மற்றும் உத்பா பின் கஸ்வான் ஆகிய இருவரது ஒட்டகம் தொலைந்து விட்டது. இவர்கள் தமது ஒட்டகத்தை தேடியவாறு இந்த குழுவிலிருந்து பின்தங்கி விட்டனர். எவ்வளவோ தேடிய பிறகும் கூட அவர்களுக்கு அவர்களது ஒட்டகம் கிடைக்கவில்லை. இப்போது 8 நபர்களைக் கொண்ட அந்த குழுவில் 6 நபர்களே எஞ்சியிருந்தனர். அவர்கள் சென்று கொண்டே இருந்தனர்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் மிஸ்டர் மார்குலிஸ் என்ற ஒரு எழுத்தாளரைப் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள். அவர் தமது அறிவிப்பில் சந்தேகத்தை ஏற்படுத்துவதற்காக சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களைப் பற்றி இவ்வாறு எழுதுகின்றார்: அதாவது சஅத் பின் அபீ வக்காஸ் மற்றும் உத்பா ஆகிய இருவரும் வேண்டுமென்றே தமது ஒட்டகத்தை தொலைத்து விட்டனர். மேலும் இந்த சாக்குப்போக்கை கூறி அவர்கள் பின்தங்கி விட்டனர்.

இந்த கலப்பற்ற நபர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியும் தைரியம் மற்றும் பற்றுணர்விற்கு சாட்சி பகரக்கூடியதாக இருக்கின்றது. இவர்களில் ஒருவர் பிஃரே மவூனாவில் இணை வைப்பவர்களின் கைகளால் கொல்லப்பட்டார். மற்றொருவர் பல்வேறு கடுமையான எதிரி படைகளை எதிர்கொண்டு ஈராக்கை வெற்றி பெறுவதற்கு காரணமாக அமைந்தார். இத்தகையவர்களைப் பற்றி இவ்வாறு சந்தேகம் கொள்வது, அந்த சந்தேகமும் கூட தமது மனதின் விருப்பத்தை வெளிப்படுத்தியவாறு சந்தேகம் கொள்வது என்பது மிஸ்டர் மார்குலிஸின் பண்பாகும்.

நகைச்சுவையான விஷயம் என்னவென்றால், மிஸ்டர் மார்குலிஸ் சாஹிப் தனது புத்தகம் தொடர்பாக இவ்வாறு வாதம் செய்கின்றார். அதாவது நான் இந்த புத்தகத்தை எல்லா விதமான காழ்ப்புணர்ச்சியிலிருந்தும் விலகி இருந்தவாறு எழுதியுள்ளேன் என்று கூறுகின்றார்.

எவ்வாறிருப்பினும் முஸ்லிம்களின் இந்த சிறிய ஜமாஅத் நஹ்லாவை சென்றடைந்தது. மேலும் செய்தி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டனர். மேலும் இவர்கள் உம்ரா செய்வதற்காக வந்துள்ளனர் என்று உளவு பார்க்கக் கூடியவர்கள் கருத வேண்டும். மேலும் எந்த சந்தேகமும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக இவர்களில் சிலர் தமது தலை முடியை மழித்தனர். ஆனால் அவர்கள் அங்கு சென்று அதிக காலம் கழிந்திருக்கவில்லை. அதற்குள் அங்கு குரைஷிகளின் ஒரு சிறிய குழு வந்தடைந்தது. அவர்கள் தாயிஃபிலிருந்து மக்காவை

நோக்கி சென்று கொண்டிருந்தனர். இரண்டு குழுவும் ஒன்று மற்றொன்றை எதிர்கொண்டது.

நிலைமை எப்படிப்பட்டதாக ஆகிவிட்டதென்றால் முஸ்லிம்கள் விரும்பாத நிலையிலும் அவர்களுக்கு இந்த முடிவை எடுக்க நேரிட்டது. அதாவது ஒன்று, அவர்களுடன் சண்டையிட்டு அவர்களை கைதிகளாக ஆக்க வேண்டும். அல்லது அவர்களை கொலை செய்து விட வேண்டும் என்று முடிவெடுத்தனர். எனவே அவர்கள் அல்லாஹ்வின் பெயரைக் கூறி தாக்குதல் தொடுத்தார்கள். இதன் காரணமாக இணை வைப்பவர்களில் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் இருவர் கைது செய்யப்பட்டனர். ஆனால் துரதிஷ்டவசமாக, நான்காவது நபர் தப்பித்து விட்டார். மேலும் முஸ்லிம்களால் அவரை பிடிக்க முடியவில்லை. இவ்வாறு முஸ்லிம்களின் இந்த திட்டம் வெற்றி பெற்றவாறு தோல்வியுற்றது.

எவ்வாறிருப்பினும் முஸ்லிம்களின் இந்த குழு பொருள்களை கைப்பற்றியது. மேலும் கைதிகள் மற்றும் பொருட் செல்வத்தை எடுத்துக் கொண்டு வேகமாக மதீனாவிற்கு திரும்பியது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இது தெரிய வந்தபோது அன்னார் மிகவும் கடுமையாக கோபமுற்றார்கள்.

மேலும் கூறினார்கள்: நான் உங்களுக்கு புனித நகரத்தில் சண்டையிடுவதற்கு அனுமதி தரவில்லை. மேலும் பொருட் செல்வத்தை பெறுவதையும் அன்னார் மறுத்து விட்டார்கள். மற்றொரு புறம், முஸ்லிம்கள் புனித நகரத்தின் புனிதத்தை முறித்து விட்டார்கள் என்று கூச்சலிட்டனர். ஏனென்றால், அவர்களில் கொல்லப்பட்ட ஒரு நபர் தலைவர் ஆவார்.

எவ்வாறிருப்பினும் இணை வைப்பவர்களைச் சார்ந்தவர்கள், தங்களது இரு கைதிகளை மீட்டுக் கொண்டு செல்வதற்காக மதீனா வந்தடைந்தனர். ஆனால் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் மற்றும் ஹஸ்ரத் உத்பா பின் கஸ்வான் ஆகிய இருவரும் திரும்பி வராததினால், அவர்களை குரைஷிகளை பிடித்து விட்டால் பிறகு உயிரோடு விட மாட்டார்கள் என்று அஞ்சியவாறு பொருமானார் (ஸல்) அவர்கள் இந்த கைதிகளை விடுவிக்க மறுத்து விட்டார்கள். மேலும் எங்களது இரண்டு நபர்கள் நலமுடன் மதீனா வந்தடைந்ததும் உங்களது இரண்டு நபர்களை விட்டு விடுவேன் என்றும் கூறினார்கள். பிறகு அவர்கள் இருவரும் திரும்பி வந்ததும் பெருமானார் (ஸல்) அவர்கள் கைதிகளை விடுவித்தார்கள். இந்த இருவரில் ஒருவர் மதீனாவில் தங்கியிருந்தபோது அவரிடம் எத்தகைய தாக்கம் ஏற்பட்டது என்றால், அவர் முஸ்லிமாகி விட்டார். மேலும் பிஃரே மவூனா சந்தர்ப்பத்தின்போது ஷஹீதானார்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 330–334)

சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள், பத்ர் போர் சந்தர்ப்பத்திற்கு முன்புள்ள நிலைமையைப் பற்றி எடுத்துக் கூறியவாறு கூறுகின்றார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் வேகமாக பத்ர் மைதானத்தை நோக்கி புறப்பட்டார்கள். இதைப் பற்றிய குறிப்பு அறிவிப்புகளில் இல்லை. அன்னார் பத்ர் மைதானத்திற்கு அருகில் சென்றடைந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களை தமக்கு பின்னால் சவாரியில் அமர்த்தியவாறு இஸ்லாமிய படையை விட்டு சிறிது தூரம் முன்னே சென்று விட்டார்கள். அப்போது ஒரு முதிய காட்டரபியை அன்னார் வழியில் கண்டார்கள். அவருடன் பேசியபோது, குரைஷிகளின் படை பத்ர் மைதானத்திற்கு மிகவும் அருகே இருக்கின்றது என்ற விஷயம் தெரிய வந்தது.

பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த விஷயத்தைக் கேட்டு திரும்பி வந்து விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் ஸுபைர் பின் அவாம், ஹஸ்ரத் சஅத் பின் வக்காஸ் ஆகியோரை நிலைமைகளை தெரிந்து கொள்வதற்காக தமக்கு முன்னால் அனுப்பி வைத்தார்கள். இவர்கள் பத்ர் மைதானத்தை அடைந்தபோது அங்கு சில இளைஞர்கள் ஒரு நீரூற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். மேலும் இந்த சஹாபாக்கள் அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து ஒருவரை அடிமையாக்கினார்கள். மேலும் அவரை பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் அழைத்துக் கொண்டு வந்தார்கள்.

அன்னார் மிகவும் மென்மையுடன் அவரிடம், படை இப்போது எங்கு இருக்கிறது? என்று கேட்டார்கள். அதற்கு அவர், நமக்கு முன்னே இருக்கக்கூடிய மலைக்கு பின்னால் இருக்கிறது என்று கூறினார். பிறகு அன்னார் அவரிடம், படையில் எத்தனை நபர்கள் இருக்கின்றனர்? என்று கேட்டார்கள். அதற்கு அவர், அதிகமான நபர்கள் இருக்கின்றனர். ஆனால் எத்தனை நபர்கள் என்பது எனக்குத் தெரியாது என்று கூறினார். மீண்டும் அன்னார் (ஸல்) அவர்கள், அவர்கள் தினமும் எத்தனை ஒட்டகத்தை அறுக்கின்றார்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர் பத்து ஒட்டகங்கள் அறுக்கப்படுகிறது என்று கூறினார். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபாக்களை நோக்கி, ஓராயிரம் நபர்கள் இருக்கின்றார்கள் என்று தெரிய வருகிறது என்று கூறினார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 355,356)

இது பற்றிய குறிப்பையும் நான் இதற்கு முன்னால் எடுத்துக் கூறியுள்ளேன். பத்ர் போர் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் சஅத் அவர்களின் தைரியத்தைப் பற்றிய அறிவிப்புகள் இருக்கின்றன. அதாவது பத்ர் போர் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் சஅத் அவர்கள் நடந்து சென்ற பிறகும் கூட சவாரியில் சென்று போர் செய்பவரைப் போன்று வீரத்துடன் போரிட்டுக் கொண்டிருந்தார்கள். இதன் காரணமாகவே ஹஸ்ரத் சஅத் அவர்கள் ஃபாரிஸுல் இஸ்லாம் என்று அழைக்கப்படுகின்றார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 104 சஅத் பின் அபீ வக்காஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது இஸ்லாத்தின் குதிரை வீரர் என்று அழைக்கப்படுகின்றார்.

(அம்தத்துல் காரி தொகுதி 1 பக்கம் 305 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

உஹது போரின்போது மக்கள் இங்கும் அங்கும் சிதறுண்டு போன சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நிலைத்து நின்ற ஒரு சில நபர்களில் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களும் ஒருவர் ஆவார்கள்.

(குத்பாத்தே தாஹிர், (தகாரீர் ஜல்ஸா ஸாலான கப்ல் அஸ் கிலாஃபத்) தக்ரீர் ஜல்ஸா ஸாலானா 1979 பக்கம் 337)

உஹது போரின் போது ஹஸ்ரத் சஅத் அவர்களின் சகோதரர் உத்பா பின் அபீ வக்காஸ் இணை வைப்பவர்கள் தரப்பிலிருந்து

**திருக்குர்ஆனிலிருந்து...**

அல்லாஹ்வின் மீது பொய்யைப் புனைந்து கூறுபவனைவிட மிக்க அநீதி இழைப்பவன் எவன்? இத்தகையோர் தம் இறைவன் முன் கொண்டு வந்து நிறுத்தப்படுவர். இவர்களே தங்கள் இறைவன் மீது பொய்யைப் புனைந்து கூறினர் என்று சாட்சியமளிப்பவர்கள் (எல்லாரும்) கூறுவர். கவனமாகக் கேளுங்கள். அல்லாஹ்வின் சாபம் அநீதியிழைப்பவர்கள் மீது உண்டாகும். (11:19)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

போரில் கலந்து கொண்டிருந்தான். அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கடுமையாக தாக்கி இருந்தான்.

இந்த சம்பவத்தை ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களும் கூட தமது ஒரு சொற்பொழிவில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது உத்பா துரதிர்ஷ்டசாலி ஆவான். அவன் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் கீழுள்ள இரண்டு அருளுக்குரிய பற்களை ஷஹீதாக்கி இருந்தான். மேலும் அன்னாருடைய அருளுக்குரிய முகத்தையும் கடுமையாக காயப்படுத்தினான். உத்பாவின் சகோதரர் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்கள் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து போரில் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அன்னாருக்கு உத்பாவின் இச்செயல் தொடர்பாக தெரிய வந்ததும், பழிவாங்க வேண்டும் என்ற துடிப்பில் இரண்டு முறை எதிரிகளின் வரிசையை உடைத்தெறிந்தவாறு அந்த அநீதியாளனைத் தேடி புறப்பட்டார்கள். மேலும் அவனை தனது கைகளால் துண்டு துண்டாக்கி தமது உள்ளத்தை குளிரச் செய்ய வேண்டும் என்று எண்ணினார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஆனால் அவன் என்னைப் பார்த்ததும் ஓடோடி விடுகின்றான். இறுதியில் மூன்றாவது முறை எதிரி படைக்குள் நுழைய நான் எண்ணியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம் மிகுந்த பரிவுடன், இறைவனின் அடியானே! உயிரை விடுவதற்கு எண்ணுகின்றாயா? என்று கூறினார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் தடுத்ததன் காரணமாக இந்த எண்ணத்திலிருந்து நான் பின் வாங்கினேன்.

(குத்பாத்தே தாஹிர், (தகாரீர் ஜல்ஸா ஸாலான கப்ல் அஸ் கிலாஃபத்) தக்ரீர் ஜல்ஸா ஸாலானா 1979 பக்கம் 346)

உஹது போர் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் மிகக் குறைவான சஹாபாக்களே நிலைத்து நின்றனர். ஹஸ்ரத் சஅத் அவர்களின் அப்போதைய நிலையை பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் சாஹிப் ஸாதா மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள். அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள் தாமே ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களுக்கு அம்பை எடுத்து கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். மேலும் ஹஸ்ரத் சஅத் அவர்கள் அந்த அம்பை எதிரிகள் மீது செலுத்திக் கொண்டே இருப்பார்கள். ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சஅத் அவர்களிடம், எனது தாயும் தந்தையும் உங்கள் மீது அர்ப்பணமாகட்டுமாக. நீங்கள் தொடர்ச்சியாக அம்பு எய்து கொண்டே இருங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் சஅத் அவர்கள் தமது இறுதி வயது வரை பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த சொற்களை மிகவும் பெருமிதத்துடன் எடுத்துக் கூறி வந்தார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 495)

ஓர் அறிவிப்பில் வந்துள்ளது. அதாவது ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: உஹது போர் நாளன்று பெருமானார் (ஸல்) அவர்கள் தன்னிடமிருந்து அம்புகளை எடுத்து எனக்கு வழங்கினார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உம்மீது எனது தாயும் தந்தையும் அர்ப்பணமாகட்டுமாக.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் மகாஸி... ஹதீஸ் எண் 4055)

ஹஸ்ரத் அலி அவர்கள் கூறுகின்றார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களைத் தவிர வேறு எவருக்காகவும், எனது தாயும் தந்தையும் அர்ப்பணமாகட்டுமாக என்ற துஆவை செய்தவாறு நான் செவியுற்றதில்லை.

பெருமானார் (ஸல்) அவர்கள் உஹது போர் சந்தர்ப்பத்தில் சஅத் அவர்களிடம் கூறினார்கள்: எனது தாயும் தந்தையும் உம்மீது அர்ப்பணமாகட்டுமாக. நீங்கள் அம்பை எய்து கொண்டே செல்லுங்கள். வலிமை வாய்ந்த இளைஞரே! அம்பை எய்து கொண்டே செல்வீராக என்று கூறினார்கள்.

(ஜாமி திர்மிதி, கிதாபுல் மனாகிப்.... ஹதீஸ் எண் 3753)

இங்கு இதுவும் குறிப்பிடத்தக்க விஷயமாகும். இந்த குறிப்பும் வந்துள்ளது. அதாவது வரலாற்றில் ஹஸ்ரத் சஅத் அவர்கள் மட்டுமின்றி ஹஸ்ரத் ஸுபைர் பின் அவாம் அவர்களைப் பற்றி பெருமானார் (ஸல்) அவர்கள், உம்மீது எனது தாயும் தந்தையும் அர்ப்பணமாகட்டுமாக என்று கூறியதாக காணக் கிடைக்கின்றது. இது புகாரியின் அறிவிப்பாகும்.

(புகாரி, கிதாப் ஃபஸாயில் அஹ்ஸாபுன் நபி (ஸல்), பாப் மனாகிபுஸ் சுபைர் பின் அல் அவாம் (ரலி), ஹதீஸ் எண் 3720)

உஹது போர் சம்பவத்தைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் சஅத் அவர்கள் கூறுகின்றார்கள்: இணை வைப்பவர்களில் ஒருவர் முஸ்லிம்களுக்கு எதிராக நெருப்பை மூட்டியுள்ளார். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஅத் அவர்களிடம், நீங்கள் அம்பை எய்து கொண்டே செல்லுங்கள். உம்மீது எனது தாயும் தந்தையும் அர்ப்பணமாகட்டுமாக என்று கூறினார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாப் ஃபஸாயிலுஸ் சஹாபா, பாப் ஃபஸ்ல் சஅத் பின் அபீ வக்காஸ் ஹதீஸ் எண் 2412)

ஹஸ்ரத் சஅத் அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த இணை வைப்பவன் (வரலாற்று நூல்களில் அவனது பெயர் ஹன்னான் என்று கூறப்படுகிறது) ஓர் அம்பை எய்தான். அது உம்மே அய்மன் மீது பட்டது. அப்போது உம்மே அய்மன் அவர்கள் காயமுற்றவர்களுக்கு தண்ணீர் வழங்கிக் கொண்டிருந்தார்கள். ஹன்னான் அதைக் கண்டு சிரித்தான். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் ஓர் அம்பை சஅத் அவர்களிடம் கொடுத்தார்கள். அந்த அம்பு ஹன்னானின் தொண்டையில் பாய்ந்தது. அவன் பின்நோக்கி விழுந்தான். அவனது நிர்வாணம் வெளிப்பட்டது. இதைக் கண்டு நபி (ஸல்) அவர்கள் புன்னகைத்தார்கள்.

(அஸாபா தொகுதி 3 பக்கம் 64 சஅத் பின் மாலிக் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எடுத்துக் கூறப்பட்ட சஹீஹ் முஸ்லிமின் இந்த ஹதீஸ் தொடர்பாக நமது நூர் ஃபவுண்டேஷன் இதற்கு மொழியாக்கம் செய்துள்ளது. அதில் இந்த குறிப்பையும் எழுதியுள்ளது. நல்ல குறிப்பு ஆகும். அதாவது பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஏற்பட்ட இந்த மகிழ்ச்சியானது அல்லாஹ்வின் இந்த பேருபகாரத்தினால் ஏற்பட்டதாகும். அதாவது அவன் ஒரு கொடிய எதிரிகளை வழிப்பாதையிலிருந்து அகற்றி விட்டான்.

(சஹீஹ் முஸ்லிம், தொகுதி 13 பக்கம் 41, நூர் ஃபவுண்டேஷன் சார்பாக அச்சிடப்பட்டது)

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வந்துள்ளது. அதாவது உஹது போர் நாளன்று ஹஸ்ரத் சஅத் அவர்கள் ஓராயிரம் அம்பை எய்தார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

இவ்வுலக வாழ்க்கையையும் அதன் அலங்காரத்தையும் விரும்புவோருக்கு, நாம் அவர்களின் செயல்(களுக்குரிய பலன்)களை இவ்வுலகிலேயே முழுமையாகக் கொடுத்து விடுவோம். அவர்களுக்கு இதில் குறைவாகக் கொடுக்கப்படமாட்டாது. (11:16)

A.Nasir Ahmad (மேலப்பாளையம்)

(குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 71)

ஹுதைபிய்யா உடன்படிக்கையின் சந்தர்ப்பத்தில் எந்த எந்த சஹாபாக்கள் சாட்சியாக கையொப்பமிட்டார்களோ அவர்களில் ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களும் அடங்குவார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 769)

மக்கா வெற்றியின்போது ஹஸ்ரத் சஅத் அவர்களிடம் முஹாஜிரீன்களின் மூன்று கொடிகளில் ஒரு கொடி இருந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 105 சஅத் பின் அபீ வக்காஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஜ்ஜத்து விதா சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் சஅத் அவர்கள் நோயுற்றார்கள். இதைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் சஅத் அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் மக்காவில் நோயுற்றேன். மரண தருவாயை அடைந்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் நலம் விசாரிப்பதற்காக என்னிடம் வந்தார்கள். நான் அன்னாரிடம், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! என்னிடம் அதிக செல்வங்கள் இருக்கின்றன. எனது சந்ததிகளில் எனக்கு ஒரு மகள் மட்டும்தான் இருக்கின்றாள். எனவே நான் மூன்றில் இரண்டு பங்கை சதகாவாக கொடுத்து விடவா என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், வேண்டாம் என்று கூறினார்கள். அதற்கு நான் பாதி செல்வத்தை சதகாவாக கொடுத்து விடவா? என்று கேட்டேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், வேண்டாம் என்று கூறினார்கள். பிறகு நான் மூன்றில் ஒரு பங்கை சதகாவாக கொடுத்து விடவா? என்று கேட்டேன். அதற்கு அன்னார், சரி! ஆனால் இதுவும் மிகவும் அதிகமாகும் என்று கூறினார்கள்.

மேலும் கூறினார்கள்: நீங்கள் உங்களது பிள்ளைகளை செல்வந்தராக விட்டுச் செல்வீர்கள் என்றால் அது அவர்கள் மக்களிடம் யாசிப்பதை விட மிகச் சிறந்தது. மேலும் எதனை நீங்கள் செலவு செய்தாலும் அதற்குரிய கூலி உங்களுக்கு கிடைக்கும். எதுவரை என்றால் நீங்கள் உங்களது மனைவியின் வாயில் ஊட்டுகின்ற ஒரு கவளத்திற்கு கூட அதற்குரிய கூலி கிடைக்கும் என்று கூறினார்கள்.

அதற்கு நான், யா ரஸூலல்லாஹ் (ஸல்)! நான் எனது ஹிஜ்ரத்தில் பின்தங்கி விடுவேனா? என்று கேட்டேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் பின்தங்கி விட்டாலும் நீங்கள் எந்த செயலை அல்லாஹ்வின் திருப்தியை வேண்டியவாறு செய்வீர்களோ அதன் மூலம் உங்களது அந்தஸ்து மற்றும் தகுதி உயரும். மேலும் நீங்கள் எனக்குப் பிறகும் உயிருடன் இருப்பீர்கள் என்று எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. எதுவரை என்றால் சமுதாயம் உங்கள் மூலமாக பயனடையும் என்று கூறினார்கள்.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் ஃபராயிஸ்.... ஹதீஸ் எண் 6733)

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வந்துள்ளது. அதாவது இதற்குப் பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! எனது சஹாபாக்களுக்காக அவர்களது ஹிஜ்ரத்தை பூர்த்தி செய்வாயாக. மேலும் அவர்களை அவர்களின் குதிகால்களில் திருப்பி விடாதிருப்பாயாக.

(சஹீஹ் புகார், கிதாபுல் ஜனாயிஸ்.... ஹதீஸ் எண் 1295)

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் சஅத் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் நோயுற்றபோது பெருமானார் (ஸல்) அவர்கள் நலம் விசாரிப்பதற்காக வருகை தந்தார்கள். மேலும் என்னிடம், நீங்கள் வஸிய்யத் செய்து விட்டீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு நான் ஆம் என்று கூறினேன். அதற்கு அன்னார், எவ்வளவு வஸிய்யத் செய்துள்ளீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு நான், எனது அனைத்து செல்வத்தையும் அல்லாஹ்வின் வழியில் வஸிய்யத் செய்து விட்டேன் என்று கூறினேன்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள், உங்களது பிள்ளைகளுக்காக எதை விட்டு வைத்துள்ளீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு நான் அவர்கள் செல்வந்தர்கள் ஆவர் என்று கூறினேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், பிறகு பத்தில் ஒரு பங்கை வஸிய்யத் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் சஅத் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இவ்வாறே கூறிக் கொண்டிருந்தேன். பெருமானார் (ஸல்) அவர்களும் அவர்கள் கூறியதையே கூறிக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் சஅத் அவர்கள் அதிகமான செல்வங்களை சதகா செய்ய விரும்பினார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் குறைவாக சதகா செய்ய வலியுறுத்தி வந்தார்கள். எதுவரை என்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மூன்றில் ஒரு பங்கை வஸிய்யத் செய்யுங்கள். மூன்றில் ஒரு பங்கு மிகவும் அதிகமாகும்.

(சுனன் நிஸாயி, கிதாபுல் வஸாயா... ஹதீஸ் எண் 3661)

எவ்வாறிருப்பினும் அறிவு படைத்தவர்கள் மற்றும் மார்க்க சட்ட வல்லுனர்களும் இதிலிருந்து, மூன்றில் ஒரு பங்கை விட அதிகமாக வஸிய்யத் செய்ய முடியாது என்பதற்கு சான்றாக இதனை காட்டுகின்றனர்.

(ஜாமி திர்மிதி, அப்வாபுல் வஸாயா.... ஹதீஸ் எண் 2116)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது தொடர்பாக கூறுகின்றார்கள்: நபிமொழிகளும் இக்கருத்தை வழிமொழிகின்றது. அதாவது தமது தேவைகளுக்காக எடுத்துக் கொண்ட பிறகு எஞ்சிய செல்வத்தை பங்கிட்டு கொடுப்பது இஸ்லாமிய போதனை அல்ல.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களில் சிலர் உங்களது அனைத்து செல்வங்களையும் சதகாவாக எடுத்துக் கொண்டு வருகின்றீர்கள். பிறகு மக்களுக்கு முன்னால் கைகளை நீட்டுகின்றீர்கள். சதகா என்பது வெறும் அதிகப்படியான செல்வத்திலிருந்து வழங்கப்படுவதே ஆகும்.

இதே போன்று அன்னார் கூறினார்கள்: நீங்கள் உங்களது சந்ததிகளை ஏழைகளாகவும், மக்களுக்கு முன்னால் கையேந்துபவர்களாவும் விட்டுச் செல்வதை விட அவர்களுக்கு செல்வத்தை விட்டுச் செல்வது மிகவும் சிறந்ததாகும்.

இவ்வாறு நபிமொழியில் வந்துள்ளது. ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் மூன்றில் இரண்டு பங்கு செல்வத்தை பங்கிட்டு கொடுப்பதற்காக அனுமதி வேண்டினார்கள். ஆனால் அன்னார் (ஸல்) அவர்கள் தடுத்து விட்டார்கள். பிறகு சஅத் அவர்கள், பாதி செல்வத்தை பங்கிட்டு கொடுக்க விரும்பினார்கள். ஆனால் அதனையும் பெருமானார் (ஸல்) அவர்கள் தடுத்து விட்டார்கள். பிறகு சஅத் அவர்கள், மூன்றில் ஒரு பங்கை பங்கிட்டு கொடுக்க அனுமதி வேண்டினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அனுமதி வழங்கினார்கள். மேலும்

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்து தம் இறைவனிடம் பணிந்து நடப்பவர்கள் நிச்சயமாக சுவர்க்கத்தில் வாழ்பவர்களாவர். அவர்கள் அதில் என்றென்றும் வாழ்ந்து வருவர். (11:24)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

அன்னார் கூறினார்கள்: மூன்றில் ஒரு பங்கு கூட மிகவும் அதிகமாகும்.

ஆக எந்த செல்வம் தேவைகளை விட அதிகமாக எஞ்சியுள்ளதோ அதனை பங்கிட்டு கொடுக்க வேண்டும் என்று எண்ணியவாறு இதுவே இஸ்லாத்தின் கட்டளை என்று கருதுவது, இஸ்லாத்திற்கு மாற்றமானதும், சஹாபாக்களின் செயல்களுக்கு எதிரானதும் ஆகும். ஏனென்றால் சஹாபாக்களில் சிலரது மரணத்தின்போது அவர்களது சந்ததிகளில் லட்சக்கணக்கான ரூபாய் பங்கிட்டு கொடுக்கப்பட்டது. இது சஹாபாக்களின் நடைமுறையாக இருந்தது.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 494)

ஓர் அறிவிப்பில் வந்துள்ளது. ஹஸ்ரத் சஅத் அவர்கள் கூறுகின்றார்கள்:

நான் நோயுற்றபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நலம் விசாரிப்பதற்காக வருகை தந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் எனது நெஞ்சில் கை வைத்தார்கள். நான் அன்னாரது கையின் குளிர்ச்சியை எனது உள்ளத்தில் உணர்ந்தேன். பெருமானார் (ஸல்) அவர்கள் கை வைத்தவாறு என்னிடம் கூறினார்கள்: உமக்கு இருதய நோய் உள்ளது. நீங்கள் பனூ ஸகீஃபின் சகோதரரான ஹாரிஸ் பின் கல்தாவிடம் செல்லுங்கள். அவர் மருத்துவர் ஆவார். நீங்கள் அவரிடம் இவ்வாறு கூறுங்கள். அதாவது மதீனாவின் 7 அஜூவா பேரீத்தம் பழங்களை அதன் கொட்டையுடன் அரைத்து உங்களுக்கு மருந்தாக தருமாறு கூறுங்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 108 சஅத் பின் அபீ வக்காஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்னொரு அறிவிப்பில் வந்துள்ளது. அதாவது பெருமானார் (ஸல்) அவர்கள், சஅத் அவர்கள் கவனித்துக் கொள்வதற்காக மக்காவில் ஒரு நபரை இதற்காகவே நியமித்தார்கள். அந்த நபரிடம் பெருமானார் (ஸல்) அவர்கள், சஅத் அவர்கள் மரணமடைந்து விட்டால் அவரை மக்காவில் நல்லடக்கம் செய்ய வேண்டாம். மாறாக, மதீனாவிற்கு கொண்டு வரப்பட்டு அங்கு நல்லடக்கம் செய்யுங்கள் என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 108 சஅத் பின் அபீ வக்காஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் சஅத் அவர்கள் வேட்டையாடுகின்ற சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்:

நபிமொழியிலிருந்து நிரூபணமாவது என்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் சுயம் வேட்டையாடியது கிடையாது. மாறாக பிறரை வேட்டையாடச் செய்தார்கள். ஒரு போரில் அன்னார் சஅத் அவர்களை அழைத்து. பாருங்கள்! அந்த மான் சென்று கொண்டிருக்கிறது. அதன் மீது அம்பு எய்யுங்கள் என்று கூறினார்கள். பிறகு சஅத் அவர்கள் அம்பை எய்ய முற்பட்டபோது பெருமானார் (ஸல்) அவர்கள் தமது மணிக்கட்டை அவர்களது தோளில் வைத்தவாறு, இறைவா! இவரின் குறி வீணாகி விடக்கூடாது என்று கூறினார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 5 பக்கம் 124)

ஹஸ்ரத் சஅத் அவர்களுக்கு அல்லாஹ் இந்த நற்பாக்கியத்தையும் வழங்கி இருந்தான். அதாவது ஈராக் அன்னாரது கரங்களாலேயே வெற்றி கொள்ளப்பட்டது. அகழ் போர் சந்தர்ப்பத்தின்போது ஒரு முறை சஹாபாக்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்து, அகழில் ஒரு பாறை இருக்கின்றது. அது உடைவதில்லை என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அங்கு வருகை தந்தார்கள். மேலும் அந்த பாறையின் மீது மூன்று முறை அடித்தார்கள். ஒவ்வொரு முறை பாறை சற்று உடைந்தது. பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹு அக்பர் என்று உரத்த குரலில் கூறினார்கள். மேலும் அன்னாரைத் பின்தொடர்ந்து சஹாபாக்களும் முழக்கமிட்டனர்.

(ரோஷன் சிதாரே தொகுதி 5 பக்கம் 124)

அரபு நாட்டில் இரண்டு மிகப்பெரிய ஆற்றல்மிக்கவர்கள் இருந்தனர். ஒன்று கிஸ்ரா, மற்றொன்று கைஸர். ஈராக்கின் பெரும் பகுதி கிஸ்ராவின் வசம் இருந்தது. மேலும் மத்யன், காதிஸிய்யா, நஹாவந்த் மற்றும் ஜலூலா போன்ற பிரசித்திப்பெற்ற போர்கள் ஹஸ்ரத் சஅத் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

மத்யனின் விவரம் இதுவாகும். மத்யன் ஈராக்கிலுள்ள பக்தாதிலிருந்து தெற்குப் பகுதியில் இருக்கின்ற தஜ்லா நதிக்கரையில் அமைந்துள்ளது. இங்கு ஒன்றன் பின் ஒன்றாக பல நகரங்கள் உருவாகின. எனவேதான் அரபிகள் இதனை மத்யன் அதாவது பல நகரங்களின் தொகுப்பு என்று அழைக்கத் தொடங்கினர்.

பிறகு காதிஸிய்யாவும் ஈராக்கின் ஒரு நகரமாகும். இங்கு முஸ்லிம்கள் மற்றும் ஃபாரஸியர்களுக்கு இடையில் ஒரு பிரசித்திப்பெற்ற போர் நடைபெற்றது. அது காதிஸிய்யா போர் என்று அழைக்கப்படுகிறது. மேலும் தற்போதுள்ள காதிஸிய்யா நகரம் கூஃபா நகரத்திலிருந்து 15 மைல் தொலைவில் உள்ளது.

நஹாவந்த் என்ற நகரம் தற்போது ஈரானில் இருக்கின்றது. ஹம்தானிலிருந்து 70 கிலோ மீட்டர் தெற்குப் பகுதியில் உள்ளது.

பிறகு ஈராக்கின் ஒரு நகரம் ஜலூலா ஆகும். இது தஜ்லத்துல் அய்மனின் நதிக்கரையில் இருக்கின்றது. இங்கு முஸ்லிம்கள் மற்றும் ஃபாரஸியர்களுக்கிடையே போர் நடைபெற்றது. இந்த நகரம் ஜலூலா என்று அழைக்கப்படுதற்கு காரணம், இந்த நகரம் ஈரானியர்களின் சடலத்தால் நிரம்பி இருந்தது.

ஈராக்கின் எல்லைப் பகுதியில் மீண்டும் மீண்டும் தொல்லை கொடுத்ததன் காரணமாக ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் காலகட்டத்தில் ஹஸ்ரத் மஸ்னஹ் பின் ஹாரிஹ் அவர்கள் போர் செய்ய அனுமதி வேண்டினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அவர்களுக்கு அனுமதி வழங்கினார்கள். மேலும் ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்களை ஒரு பெரும் படையுடன் அவர்களுக்கு உதவி செய்வதற்காக அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் காலித் பின் வலீத் அவர்கள் ஈராக்கில் ஹஸ்ரத் மஸ்னஹ் அவர்களை தனது பிரதிநிதியாக நியமித்தார்கள். ஆனால் ஹஸ்ரத் காலித் அவர்கள் ஈராக்கிலிருந்து சென்றதும் இந்த திட்டம் பின்னடைவை சந்தித்தது. ஹஸ்ரத் உமர் அவர்கள் கலீஃபாவாக ஆன பிறகு அன்னார் மீண்டும் ஈராக்கின் பக்கம் கவனம் செலுத்தினார்கள். ஹஸ்ரத் முஸன்னாஹ் அவர்கள் பல போர்களில் எதிரிகளை தோல்வியுறச் செய்து ஈராக்கின் பெரும் பகுதியை கைவசப்படுத்தினார்கள்.

அந்த சமயத்தில் ஈராக் கிஸ்ராவின் வசம் இருந்தது. ஈரானியர்களுக்கு முஸ்லிம்களின் போர் திறமை பற்றி தெரிய வந்ததும் மேலும் முஸ்லிம்கள் தொடர்ச்சியாக வெற்றி பெற்று வந்தது ஆகியவை அவர்களின் கண்களை திறந்தபோது அவர்கள் பூரான் துஹ்த் என்ற பெண்ணுக்கு பதிலாக கிஸ்ரா குடும்பத்தின் உண்மையான வாரிசான யஸ்த்கர்தை அரியணையில் அமர்த்தினார்கள். அவன் அரியணையில் அமர்ந்ததுமே ஈரானிய அரசின் அனைத்து ஆற்றல்களையும் ஒன்று சேர்த்தான். மேலும் முழு நாட்டிலும் முஸ்லிம்களுக்கு எதிராக பழி வாங்கும் நெருப்பை மூட்டினான். இந்த நிலைமையில் ஹஸ்ரத் மஸ்னஹ் அவர்களுக்கு வலுக்கட்டாயமாக அரபின் எல்லையிலிருந்து விலக நேர்ந்தது. ஹஸ்ரத் உமர் அவர்களுக்கு இந்த சம்பவத்தைப் பற்றி தெரிய வந்தபோது அன்னார் கிஸ்ராவிற்கு எதிராக முஸ்லிம்களை ஒன்று

திரட்டினார்கள். இதன் விளைவாக அரபு நாட்டில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. மேலும் எல்லா புறமிருந்தும் இஸ்லாத்திற்காக உயிரை அர்ப்பணிக்கக் கூடியவர்கள் உயிரை கையில் எடுத்துக் கொண்டு கிலாஃபத்தின் தலைமையத்தை நோக்கி வரத் துவங்கினர்.

ஹஸ்ரத் உமர் அவர்கள், இந்த திட்டத்திற்கு யாரிடம் தலைமையை ஒப்படைப்பது? என்று ஆலோசனை கேட்டார்கள். பொது மக்களின் ஆலோசனையுடன் ஹஸ்ரத் உமர் அவர்களே இந்த திட்டத்திற்கு தலைமை வகிக்க ஆயத்தமானார்கள். ஆனால் அலி மற்றும் மூத்த சஹாபாக்கள் இதற்கு மாற்றமான கருத்தை கொண்டிருந்தனர். மேலும் இந்த நோக்கத்திற்காக ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களின் பெயர் முன்மொழியப்பட்டது.

அப்போது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் எழுந்து, யா அமீரல் முஃமினீன் அவர்களே! இந்த திட்டத்திற்கு சரியான நபரை நான் அறிந்து கொண்டேன் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் அலி அவர்கள், அவர் யார்? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள், அது ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் ஆவார்கள் என்று கூறினார்கள். இதற்குப் பிறகு அனைவரும் ஹஸ்ரத் சஅத் அவர்களின் பெயரை ஏற்றுக் கொண்டார்கள்.

மேலும் ஹஸ்ரத் உமர் அவர்கள் சஅத் அவர்கள் தொடர்பாக கூறினார்கள்: ஒரு மிகப்பெரிய தைரியசாலி மற்றும் வீரமிக்கவர் ஆவார். மேலும் மிகச்சிறந்த அம்பு எய்யும் நபர் ஆவார்.

ஹஸ்ரத் மஸன்னாஹ் அவர்கள் கூஃபாபிற்கும் வாஸித்திற்கும் இடையே இருக்கின்ற ஸீ கார் என்ற இடத்திற்கு உயிரை அர்ப்பணிக்கக்கூடிய **8000** வீரர்களுடன் ஹஸ்ரத் சஅத் அவர்களை எதிர்நோக்கி காத்துக் கொண்டிருந்தபோது இறைவன் புறமிருந்து அவர்களுக்கு அழைப்பு வந்தது. மேலும் அவர்களது மரணம் நிகழ்ந்தது. அவர்கள் தமது சகோதரரான ஹஸ்ரத் முஅன்னாஹ் அவர்களை படைக்கு தலைவராக நியமித்தார்கள். ஹஸ்ரத் முஅன்னாஹ் அவர்கள் ஹஸ்ரத் சஅத் அவர்கள் சந்தித்தார்கள். மேலும் ஹஸ்ரத் மஸன்னாஹ் அவர்களின் தூதுச் செய்தியை எட்ட வைத்தார்கள். ஹஸ்ரத் சஅத் அவர்கள் தமது படையை ஆய்வு செய்தபோது இந்த படை ஏறக்குறைய **20,30** ஆயிரம் நபர்களைக் கொண்டிருந்தது. அன்னார் படையை ஒழுங்குபடுத்தினார்கள். மேலும் படையை வலப்புறம் மற்றும் இடப்புறமாக பிரித்து அவர்களுக்கு தனித்தனியாக ஒரு அமீரை நியமித்தார்கள். மேலும் முன்னேறிச் சென்றவாறு காதிஸிய்யாவை முற்றுகையிட்டார்கள்.

காதிஸிய்யா போர் ஹிஜ்ரி **16** ஆம் ஆண்டின் இறுதியில் நடைபெற்றது. இணை வைப்பவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய இரண்டு லட்சத்தி எண்பது ஆயிரமாக இருந்தது. முஸ்லிம்களின் படையில் **30000** பேர் இருந்தனர். ஈரானியர்களின் படையை ருஸ்தம் வழிநடத்தி வந்தார். ஹஸ்ரத் சஅத் அவர்கள் இணை வைப்பவர்களை இஸ்லத்தின் பால் அழைத்தார்கள். ஹஸ்ரத் முகைரா பின் ஷுஃபா அவர்களை இதற்காக அனுப்பி வைத்தார்கள்.

ருஸ்தம், முகைரா அவர்களிடம், நீங்கள் ஏழைகளாவீர்கள். ஏழ்மையை போக்குவதற்காக இவை அனைத்தையும் நீங்கள் செய்கின்றீர்கள். நாங்கள் உங்களுக்கு எந்த அளவுக்கு வழங்குவோம் என்றால் அது உங்களுக்கு போதுமானதாக இருக்கும் என்று கூறினான். அதற்கு முகைரா அவர்கள், நாங்கள் இறைவனது தூதர் (ஸல்) அவர்களது அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ளோம். நாங்கள் உம்மை ஏக இறைவனின் பக்கமும், அவனது தூதர் (ஸல்) அவர்களின் மீது ஈமான் கொள்வதன் பக்கமும் அழைக்கின்றோம். நீங்கள் ஏற்றுக் கொண்டால் அது உங்களுக்கு சிறந்தது. இல்லையென்றால் போர்தான் நடைபெறும். வாள் இருக்கின்றது. அது எங்களுக்கும் உங்களுக்கும் இடையில் தீர்ப்பு வழங்கும் என்று கூறினார்கள்.

இந்த பதிலைக் கேட்டு ருஸ்தமின் முகம் கடுமையான கோபத்திற்குள்ளாகியது. ஏனென்றால் இவர்கள்தான் போர் செய்ய விரும்பினார்கள். ஆனால் ருஸ்தம், சரி! என்று கூறினான்.

எவ்வாறிருப்பினும் அவனது முகம் சிவந்தது. அவன் கூறினான்: சூரியன் மற்றும் சந்திரனின் மீது ஆணையாக! காலை விடிவதற்குள் நாங்கள் போரை துவக்குவோம். மேலும் உங்கள் அனைவரையும் கொன்று அழித்து விடுவோம் என்று கூறினான்.

அதற்கு முகைரா அவர்கள், லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ் அதாவது அனைத்து ஆற்றல்களின் தலையூற்று அல்லாஹ்வே ஆவான் என்று கூறினார்கள். இதைக் கூறிவிட்டு அவர்கள் தமது குதிரையில் அங்கிருந்து கிளம்பி விட்டார்கள்.

ஹஸ்ரத் சஅத் அவர்களுக்கு ஹஸ்ரத் உமர் அவர்களின் தூதுச் செய்தி கிடைத்தபோது, அதாவது அவர்களை முதலில் உண்மையின் பக்கம் அழையுங்கள் என்ற கூற்றிற்கேற்ப ஹஸ்ரத் சஅத் அவர்கள் புகழ்பெற்ற கவிஞரான ஹஸ்ரத் உமர் பின் மஃதி மற்றும் ஹஸ்ரத் அஷ்அஸ் பின் கைஸ் ஆகியோரை இந்த குழுவுடன் அனுப்பி வைத்தார்கள்.

ருஸ்தமை இவர்கள் நேரில் எதிர்கொண்ட போது அவன், நீங்கள் எங்கே செல்கின்றீர்கள் என்று கேட்டான். அதற்கு அவர்கள், உங்களது தலைவரை சந்திக்க செல்கின்றோம் என்று கூறினர்.பிறகு ருஸ்திமற்கும் இவர்களுக்கும் இடையே விரிவான பேச்சுவார்த்தை நடந்தது. குழுவைச்சார்ந்த உறுப்பினர்கள் இவ்வாறு கூறினர்: அதாவது எங்களது தூதர் (ஸல்) அவர்கள், நாங்கள் உங்களது இடத்தை கைப்பற்றுவோம் என்று எங்களிடத்தில் வாக்குறுதி வழங்கியுள்ளார்கள் என்று கூறினர். அதற்கு ருஸ்தம் மண்ணால் நிறைந்த கூடையை கொண்டு வரச் செய்து, இதோ எடுத்துக் கொள்ளுங்கள். இதுவே எங்களது நிலமாகும். இதனை உங்களது தலையில் சுமந்து கொள்ளுங்கள் என்று கூறினான்.

ஹஸ்ரத் உமர் பின் மஃதி அவர்கள் விரைவாக செயல்பட்டு அந்த மண் கூடையை எடுத்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறினார்கள். மேலும் நாங்கள் வெற்றி பெற்று விட்டோம். அவர்களது பூமி நமது கையில் கிடைத்து விட்டது என்று கூறினார்கள். பிறகு அவர்கள் ஈரானின் அரசரின் அரியணைக்கு சென்று, அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு விடுத்தார்கள். எனவே அவர் கடுங்கோபம் கொண்டவாறு, எனது அரியணையிலிருந்து சென்று விடுங்கள். நீர் ஒரு தூதுவராக இல்லாமலிருந்திருந்தால் நான் உம்மை கொலை செய்திருப்பேன் என்று கூறினார். பிறகு அவர் ருஸ்தமிடம், இவருக்கு தகுந்த பாடத்தை புகட்டுமாறு கட்டளையிட்டான்.

பிறகு வியாழக்கிழமை மதிய வேளைக்குப் பிறகு போருக்கான அறிவிப்பு முழுங்கியது. ஹஸ்ரத் சஅத் அவர்கள் மூன்று முறை அல்லாஹு அக்பர் என்று உரத்த குரலில் முழக்கமிட்டார்கள். மேலும் நான்காவது முறையில் போரை ஆரம்பம் செய்தார்கள். ஹஸ்ரத் சஅத் அவர்கள் நோயுற்றிருந்தார்கள். போர்க் களத்தில் அமர்ந்திருந்தவாறு படைக்கு வழிகாட்டல் வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நான் உங்களுக்கு அன்பான முறையில் அறிவுறுத்த நாடினாலும், நீங்கள் வழிதவறியவர்களாகவே இருக்க அல்லாஹ் முடிவு செய்தால், என் அறிவுரை உங்களுக்கு எப்பலனும் அளிக்காது. அவனே உங்கள் இறைவன். அவனிடமே நீங்கள் திருப்பப்படுவீர்கள். **(11:35)**

A.Basheer Ahmad, Sec.Waqf-e-jadid, Melapalayam

(குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 79–82 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 4 பக்கம் 333 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த சம்பவத்தைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் உமர் அவர்களின் காலத்தில் ஹுஸ்ரு பர்வேஸின் பேரன் யஸ்த்கர்தின் அரியணைக்குப் பிறகு ஈராக்கில் முஸ்லிம்களுக்கு எதிராக பெரிய அளவில் போருக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டபோது ஹஸ்ரத் உமர் அவர்கள் அவர்களை எதிர்கொள்வதற்காக ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களின் தலைமையில் ஒரு படையை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் சஅத் அவர்கள் போர் செய்வதற்காக காதிஸிய்யா என்ற இடத்தை தேர்வு செய்தார்கள். ஹஸ்ரத் உமர் அவர்களுக்கும் இந்த இடத்தின் வரைபடத்தை அனுப்பி வைத்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் அவர்கள் இந்த இடத்தை விரும்பினார்கள்.

அத்துடன் ஈரானிய அரசருடன் போர் செய்வதற்கு முன்பாக ஒரு பிரதிநிதியை ஈரானிய அரசரிடம் அனுப்பி வைத்தவாறு, அவருக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுப்பது உங்களின் கடமையாகும் என்று ஹஸ்ரத் உமர் அவர்கள் சஅத் அவர்களுக்கு எழுதியிருந்தார்கள்.

எனவே சஅத் அவர்களுக்கு இந்த கட்டளை கிடைத்த பிறகு ஒரு குழுவை யஸ்த்கர்தை சந்திக்க அனுப்பி வைத்தார்கள். இந்த குழு ஈரானிய அரசரின் அரியணையை சென்றடைந்தபோது ஈரானிய அரசர், இவர்கள் எதற்காக வந்துள்ளனர் என்று கேட்குமாறு தனது தூதுவர் மூலமாக கேட்கச் செய்தார். அவர் இந்த கேள்வியை கேட்டதும், குழுவின் தலைவரான ஹஸ்ரத் நுஃமான் பின் மக்ரம் அவர்கள் எழுந்து நின்றார்கள். மேலும் அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகையைப் பற்றி எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் எங்களுக்கு இஸ்லாத்தை பரப்புமாறும், முழு உலகிலுள்ள மக்களை உண்மையான மார்க்கத்தில் இணைவதற்கு அழைப்பு கொடுக்கும் படியும் கட்டளையிட்டுள்ளார்கள். எனவே இந்த கட்டளைக்கேற்ப நாங்கள் உங்களிடத்தில் வந்துள்ளோம். மேலும் உங்களை இஸ்லாத்தில் இணைவதற்கு அழைப்பு கொடுக்கின்றோம் என்று கூறினர்.

யஸ்த்கர்த் இந்த பதிலைக் கேட்டு கடும் கோபமுற்றான். மேலும் இவ்வாறு கூறினான்: நீங்கள் காட்டுமிராண்டிகளாகவும், பிணங்களை உண்ணக்கூடிய சமுதாயத்தினர் ஆவீர்கள். உங்களை பசி மற்றும் பட்டினி இவ்வாறு செய்யத் தூண்டியது என்றால் நான் உங்கள் அனைவருக்கும் எந்த அளவுக்கு உணவிற்கான பொருட்களை வழங்க தயாராக உள்ளேன் என்றால் அதன் மூலம் நீங்கள் நிம்மதியாக உங்களது வாழ்க்கையை கழிக்க முடியும்.

மேலும் கூறினான்: இவ்வாறே உங்களுக்கு அணிவதற்கு ஆடையையும் வழங்குவேன். இந்த பொருட்களை நீங்கள் பெற்றுக் கொண்டு உங்களது நாட்டிற்கு திரும்பிச் சென்று விடுங்கள். இங்கு எல்லையில் அமர்ந்தவாறு பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருக்கின்றீர்கள். அதை விட்டு விடுங்கள்.

நான் எவ்வாறு விரும்புகின்றேனோ அதேபோன்று அந்த இடத்தை கைப்பற்ற எனக்கு வழிவிடுங்கள். நீங்கள் எங்களுடன் சண்டையிட்டு ஏன் உங்களது உயிரை அழித்துக் கொள்ள விரும்புகின்றீர்கள்? என்று கூறினான்.

அவன் தனது பேச்சை முடித்த பிறகு இஸ்லாமிய குழு தரப்பிலிருந்து ஹஸ்ரத் முகைரா பின் ஸிரார் அவர்கள் எழுந்து நின்று அவனிடம், நீங்கள் எங்களைப் பற்றி எதையெல்லாம் கூறினீர்களோ அது முற்றிலும் சரிதான். நாங்கள் காட்டுமிராண்டிகளாகவும், பிணங்களை உண்ணக்கூடிய சமுதாயத்தினர்தான். நாங்கள் பாம்பையும், தேள், பல்லியையும் உண்டு வந்தோம். ஆனால் அல்லாஹ் எங்கள் மீது அருள் செய்தான். மேலும் அவன் எங்களை நேர்வழி படுத்துவதற்காக தனது தூதரை அனுப்பினான். நாங்கள் அவர் மீது ஈமான் கொண்டோம். மேலும் நாங்கள் அவரது கூற்றிற்கேற்ப செயல்பட்டோம்.

இதன் விளைவு என்னவாயிற்று என்றால், எங்களிடம் ஒரு புரட்சி ஏற்பட்டு விட்டது. மேலும் நீங்கள் எங்களைப் பற்றி கூறிய அந்த தீமைகள் இப்போது எங்களிடம் இல்லை. நாங்கள் இப்போது எந்தவொரு பேராசைக்கும் இணங்க ஆயத்தமாக இல்லை. உங்களுடன் எங்களது போர் ஆரம்பமாகி விட்டது. இப்போது இதன் முடிவு போர் மைதானத்தில்தான் தெரியும். உலக செல்வங்கள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றின் பேராசை எங்களை எங்களது நோக்கத்திலிருந்து ஒருபோதும் விலக்கி வைக்க முடியாது.

இந்த விஷயத்தை யஸ்கர்த் கேட்டதும் கடும் கோபமுற்று தமது பணியாளரிடம், மண்ணின் ஒரு கூடையை எடுத்து வா என்று கூறினான். மண் கூடை கொண்டு வரப்பட்டதும் அவன் இஸ்லாமிய குழுவின் தலைவரை முன்னால் அழைத்து, நான் கூறியவற்றை நீங்கள் மறுத்து விட்டீர்கள். எனவே இப்போது இந்த மண் கூடையை விட வேறு எதுவும் உங்களுக்கு கிடைக்காது என்று கூறினான்.

அந்த சஹாபி முன்னேறிச் சென்று தமது தலையை குனிந்து அந்த மண் கூடையை தமது முதுகில் வைத்தார். மேலும் அங்கிருந்து குதித்து மிக வேகமாக அந்த அவையை விட்டு வெளியே வந்தார். மேலுத் தம்முடன் வந்தவர்களிடம் உரத்த குரலில், இன்று ஈரானின் அரசர் தனது கைகளால் தனது நாட்டின் மண்ணை நம்மிடத்தில் ஒப்படைத்து விட்டார் என்று கூறியவாறு தமது குதிரையில் சவாரி செய்தவாறு மிக வேகமாக அங்கிருந்து சென்று விட்டார்.

அரசர் இந்த முழக்கத்தை செவியுற்றதும் சிணம்கொண்டு தனது அரசனையில் இருப்பவர்களிடம், ஓடிச்சென்று மண் கூடையை அவரிடமிருந்து திரும்ப பெற்று வாருங்கள் என்று கூறினான். மேலும் நானே எனது கைகளால் தனது நாட்டின் மண்ணை அவர்களிடம் ஒப்படைத்து விட்டேனே என்று கருதினான். ஆனால் அந்த சஹாபி குதிரையில் பயணம் செய்தவாறு வெகு தொலைவிற்கு சென்று விட்டார். ஆனால் இறுதியில் அவர் கூறியதே நிறைவேறியது. சில வருடத்திற்குள் முழு ஈரானும் முஸ்லிம்களின் வசம் வந்தது.

இந்த வியக்கத்தக்க மாற்றம் முஸ்லிம்களிடம் ஏன் ஏற்பட்டது? ஏனென்றால், திருக்குர்ஆனின் போதனைகள் அவர்களின் ஒழுக்கம், அவர்களின் பழக்க வழக்கத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. அவர்களது பாவத்திற்குரிய வாழ்க்கையின் மீது அவன் ஒரு மரணத்தை ஏற்படுத்தி விட்டான். மேலும் அவர்களை உயர்தரமான ஒழுக்கத்தில் நிலைபெறச் செய்து விட்டான். இதன் விளைவாக அவர்கள் உலகத்தில் இஸ்லாத்தை பரப்பக் கூடியவர்களாக திகழ்ந்தார்கள். மேலும் இஸ்லாத்தின் போதனைகளின்படி செயல்பட்டவாறு உண்மையான முஸ்லிம்களாக ஆக்கக் கூடியவர்களாக திகழ்ந்தனர். மேலும் எவ்வித அச்சமோ, அபாயமோ மேலும் எவ்வித ஆற்றலோ அவர்களை வீழ்த்த முடியவில்லை.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 204–205)

## திருக்குர்ஆனிலிருந்து...

நூஹ் தன்னுடைய இறைவனை அழைத்து, என் இறைவா! நிச்சயமாக என் மகன் என் குடும்பத்தைச் சேர்ந்தவன். மேலும் உன் வாக்குறுதி(யும்) மிக்க உண்மையானதே. தீர்ப்பு வழங்குபவர்களிலெல்லாம் சிறந்த தீர்ப்பு வழங்குபவன் நீயே என்றார். **(11:46)**

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

எவ்வாறிருப்பினும் இவர்களைப் பற்றிய எஞ்சிய குறிப்பை பிறகு எடுத்துக் கூறுவேன். இன்ஷா அல்லாஹ். அவர்களைப் பற்றிய குறிப்பு இன்னும் சிறிது எஞ்சியுள்ளது.

தற்போது நான் சில ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பேன். முதலாவது ஜனாஸா பாகிஸ்தானைச் சார்ந்த நாஸிர் தஃலீமுல் குர்ஆன் வக்ஃபே ஆர்ஸியான முஹம்மது அக்ரம் பாஜ்வா சாஹிப் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய புஷ்ரா அக்ரம் சாஹிபா அவர்களுடையதாகும். 25 மார்ச் 2020 அன்று தனது 66 வது வயதில் அன்னார் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

மர்ஹூமா அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். மேலும் அவர்களது பிள்ளைகளில் இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் இருக்கின்றனர். புஷ்ரா அக்ரம் சாஹிபா தனது கணவரான மதிப்பிற்குரிய முஹம்மது அக்ரம் பாஜ்வா சாஹிப் அவர்களுடன் 15 வருடங்கள் லைபீரியாவில் இருந்துள்ளார்கள். அந்த காலகட்டத்தல் லைபீரியாவின் சத்ர் லஜ்னா இமாயில்லாஹ்வாக தொண்டாற்றும் நற்பாக்கியத்தை பெற்றார்கள். லைபீரியாவில் போர் நடைபெற்ற போது தனது கணவர் மற்றும் குழந்தைகளுடன் 15 நாட்கள் வரை இராணுவத்தின் கண்காணிப்பில் இருந்தார்கள்.

முஹம்மது அக்ரம் பாஜ்வா சாஹிப் எழுதுகின்றார்கள்: மர்ஹூமா அவர்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த ஒருவருடன் அதாவது அக்ரம் சாஹிப் அவர்களுடன் 37 வருட காலம் மிகவும் கலப்பற்ற முறையிலும், பொறுமையுடனும், பற்றுணர்வுடனும் கழித்துள்ளார்கள். குறிப்பாக நான் லைபீரியாவில் முபல்லிக்காகவும், அமீர் ஜமாஅத்தாகவும் நியமிக்கப்பட்டபோது 23 வருட காலத்தில் தப்லீக் மற்றும் தர்பிய்யத் போன்ற பணிகளில் உதவி செய்து வந்தார்கள். மேலும் விருந்தினர்களுக்கு உபசரிப்பு செய்து வந்தார்கள். மற்ற ஜமாஅத் பணிகளிலும் உதவி வந்தார்கள்.

மேலும் இவர்கள் லைபீரியாவின் சத்ர் லஜ்னா இமாயில்லாஹ்வாக தொண்டாற்றும் நற்பாக்கியத்தை பெற்றார்கள். லைபீரியாவில் இருந்த 15 வருட காலத்தில் நீண்ட காலம் மலேரியா மற்றும் டைஃபாய்டு நோய்க்கு ஆளாகி இருந்தார்கள். இருப்பினும் மிகவும் பொறுமையுடன் எனக்கு ஒத்துழைப்பு வழங்கி வந்தார்கள். மர்ஹூமா குழந்தைகளின் தர்பிய்யத்தை சிறந்த முறையில் செய்தார்கள். மேலும் இரண்டு குழந்தைகள் பற்றுணர்வுடன் ஜமாஅத்துடன் ஒன்றி இருக்கின்றது.

வாழ்க்கையை அர்ப்பணித்த ஒரு நபரான மன்ஸூர் சாஹிப் அங்குள்ள ஷுஹதாக்களின் பள்ளிக்கூடத்தின் பிரின்ஸ்பல் ஆவார்கள். அவர்கள் எழுதுகின்றார்கள்: எப்போது வரை நான் தனியாக லைபீரியாவில் இருந்தேனோ தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் வரை அவர்களின் வீட்டில் வைத்து எனக்கு விருந்து உபசரிப்பு செய்துள்ளார்கள். தமது பிள்ளைகளைப் போன்றே என்னையும் வைத்திருந்தார்கள். இளைய சகோதரனைப் போன்று என்னை வைத்திருந்தார்கள். அல்லாஹ் இவர்களது குழந்தைகளை இவர்களது துஆக்களுக்கு வாரிசாக்குவானாக. மேலும் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக. பாவமன்னிப்புடனும் கருணையுடனும் நடந்து கொள்வானாக.

இரண்டாவது ஜனாஸா, கைர்பூர் மாவட்டத்தைச் சார்ந்த இக்பால் அஹ்மது நாஸிர் பேர்கோட்டி சாஹிப் அவர்களுடையதாகும். 14 ஜூலை 2020 அன்று 82 வது வயதில் அன்னார் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர்களது மகன் அக்பர் அஹ்மது தாரிஹ் சாஹிப் புர்கினோஃபாஸோவின் முபல்லிக் ஆவார். அவர் கூறுகின்றார்: மதிப்பிற்குரிய மியான் நூர் முஹம்மது சாஹிப் ரஃபீக் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியின் மகனாவார்கள். மியான் இமாம் தீன் சாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியின் பேரன் ஆவார்கள். மேலும் மியான் பீர் முஹம்மது சாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய ஹாபிஸ் முஹம்மது இஸ்ஹாக் சாஹிப் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது சஹாபியின் சகோதரரின் மகன் ஆவார்கள்.

அன்னார் ஜமாஅத் பணிகளின் அதிகமாக பங்கெடுத்து வந்தார்கள். நீண்ட காலமாக செகரட்டரி மால் ஆக தொண்டாற்றும் நற்பாக்கியத்தை பெற்றார்கள். அன்ஸாருல்லாஹ்வின் ஸயீம் ஆகவும், இமாமுஸ் ஸலாத்தாகவும், முரப்பி அத்ஃபாலாகவும் தொண்டாற்றியுள்ளார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: குழந்தைப் பருவத்தில் நான் பார்த்துள்ளேன். ஒரு டப்பாவில் பணத்தை தனியாக வைத்திருப்பார்கள். அது பற்றி கேட்கும்போது, குறித்த நேரத்தில் சந்தாவை செலுத்துவதற்காக சந்தாவின் பணத்தை அவ்வப்போது தனியாக எடுத்து வைக்கின்றேன் என்று கூறுவார்கள். மிகுந்த ஆர்வத்துடன் தப்லீக் செய்து வந்தார்கள். அன்னார் மூலமாக நல்லுள்ளம் கொண்ட பலர் ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். துஆ செய்யும் பழக்கம் கொண்டவர். தொழுகையை பேணக்கூடியவர். தஹஜ்ஜுத் தொழக் கூடியவர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இவர்கள் 2016 ஆம் ஆண்டு புர்கினோஃபாஸோ வந்தார்கள். அப்போது எத்தனை ஆண்டு மாநாடுகள், கூட்டங்கள் நடைபெற்றதோ அதில் கலந்து கொண்டார்கள். மேலும் உணர்வுப் பூர்வமாக முழக்கமிடுவார்கள். அது கலந்து கொள்ளக்கூடியவர்களுக்கு எழுச்சியூட்டக்கூடியதாக அமைந்தது. ஏனென்றால் பாகிஸ்தானில் நீண்ட காலமாக ஜமாஅத்தின் மாநாடுகள் நடைபெறாததினால் இவர்களது உள்ளத்தில் கவலை இருந்தது. அன்னார் தமக்குப் பின்னால் அவர்களது மனைவி பஷீரா பேகம் சாஹிபா மற்றும் மூன்று மகன்கள் மற்றும் மூன்று மகள்களை விட்டுச் சென்றுள்ளார்கள்.

புர்கினோஃபாஸோவின் இன்சார்ஜ் மிஷ்னரி சாஹிப் எழுதுகின்றார்கள்: இவர்களுக்கு மொழிப் பிரச்சனை இருந்தது. ஏனென்றால் அங்கு பிரன்ச் பேசப்பட்டு வந்தது. எனினும் அவர்கள் இங்கு வந்ததும் இவர்களின் அன்பின் மொழியை ஒவ்வொருவராலும் புரிந்து கொள்ள முடியும். அவர்கள் ஒவ்வொருவருடனும் எந்த அளவுக்கு அன்புடன் சந்திப்பார்கள் என்றால் ஒவ்வொருவரும் அவர்களை நேசிப்பவராக ஆகிவிடுவார். இவர்களது வஃபாத்தின்போது இங்குள்ள உள்ளூர் மக்கள் மிகவும் அன்புடன் இவர்களைப் பற்றிய குறிப்பை எழுதியுள்ளார்கள்.

அவர்கள் எழுதுகின்றார்கள்: நமது தேசிய இஷாஅத் செயலர் பாபீனா (Bapina) சாஹிப் இவர்களது புகைப்படத்தை அனுப்பினார்கள். இவர்கள் வஃபாத்திற்குப் பிறகு இவ்வாறு எழுதியுள்ளார்கள். புர்கினோஃபாஸோவில் இவர்கள் தங்கியிருந்தபோது இவர்களை நான் சந்தித்தேன். இவர்களை உண்மையான அஹ்மதியாக கண்டேன். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்புடனும், கருணையுடனும் நடந்து கொள்வானாக. மேலும் இவர்களது பிள்ளைகளை இவர்களது துஆக்களுக்கு வாரிசாக்குவானாக. இவர்களது மகன் அங்கு முரப்பியாக இருக்கின்றார்கள். அவர்களால் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை.

மூன்றாவது ஜனாஸா முஹம்மது இப்ராஹீம் சாஹிப் அவர்களின் மனைவியான குலாம் ஃபாத்திமா ஃபஸ்மிதா சாஹிபா அவர்களுடையதாகும். 18 ஜூலை 2020 அன்று தனது 72 வது வயதில் அன்னார் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

1944 ஆம் ஆண்டு இவர்களது தந்தை பைஅத் செய்தார்கள். இவர்களது பெயர் நேக் முஹம்மது ஆரிஃப் காலே கான் ஆகும். பைஅத் செய்வதற்கு முன்பு இவர்கள் கனவு கண்டார்கள். அதாவது நான் ஒரு கண்ணியத்திற்குரிய நபரை சந்திக்க செல்கின்றேன். நான்

அவரை பார்த்தபோது ஓடிச் சென்று அவரை சந்திக்கின்றேன். அந்த நபர் கூறினார்: காலே கான், நீங்கள் எப்போது எம்மிடம் வருகின்றீர்கள்? என்று கேட்டார். அதற்கு நான்தான் வந்து விட்டேனே என்று பதிலளித்தேன்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஒரு நபரிடம் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபாவின் புகைப்படத்தை பார்த்தபோது இந்த நபரைத்தான் கனவில் பார்த்தேன் என்று அடையாளங்கண்டு கொண்டேன்.

பிறகு அவர்கள் கடிதம் மூலமாக பைஅத் செய்தார்கள். இவர்களது பைஅத்திற்குப் பிறகு இவர்களது மனைவியும், என்னுடைய பைஅத்தையும் இத்துடன் வாங்குங்கள் என்று கூறினார்கள். மேலும் அவர்களும் பைஅத் செய்தார்கள். கணவன் மனைவி இருவரும் கலப்பற்ற நபர்கள் ஆவர்.

இவர்களது மகள் கூறுகின்றார்கள்: ஐவேளை தொழுகையை பேணக்கூடியவர். தஹஜ்ஜுத் தொழக் கூடியவர். திருக்குர்ஆனை தொடர்ச்சியாக திலாவத் செய்யக்கூடியவர் ஆவார்கள்.

மேலும் இவர்களது குழந்தைகள் பெரும்பாலும் இவர்களை இரவு நேரத்தில் உருக்கத்துடன் துஆ செய்து கொண்டிருப்பதையே பார்த்துள்ளார்கள். ஜுமுஆ தொழுகையை தொழுவதற்கு பெண்களுக்கு அனுமதி இருக்கும்பேது ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவே பள்ளிவாசலுக்கு வந்து விடுவார்கள். மேலும் நவாஃபில் தொழுது வந்தார்கள். துஆக்களில் நேரத்தை கழிப்பார்கள். மிகவும் தைரியமான, பொறுமையை மேற்கொள்ளக்கூடிய பெண்மணி ஆவார்கள்.

இவர்களது கணவர் 1965 ஆம் ஆண்டு மற்றும் 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற போர்களில் இரண்டு முறை கைது செய்யப்பட்டார்கள். முதல் முறை ஒரு நீண்ட காலமாக கணவர் உயிருடன் இருக்கின்றார் என்பதற்கான எந்த தகவலும் கிடைக்காமல் இருந்தது. அவர் ஷஹீதாகி விட்டார் என்றே கருதப்பட்டு வந்தது. ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது. இருப்பினும் எனது கணவர் உயிருடன் இருக்கின்றார் என்ற உறுதியான தைரியம் அவர்களிடம் இருந்தது. மேலும் நிச்சயமாக திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கை இருந்தது. இறுதியில் அல்லாஹ் அருள் செய்தான். அவரது கணவருக்கு விடுதலை கிடைத்தது. அவர்கள் திரும்பி வந்து விட்டார்கள்.

மர்ஹூமா தமக்குப் பின்னால் கணவனான மதிப்பிற்குரிய முஹம்மது இப்ராஹீம் சாஹிப் மட்டுமின்றி நான்கு மகன்களையும், இரண்டு மகள்களையும் நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். மூன்று மகன்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள் ஆவர். முஹம்மது ஜாவீது சாஹிப் கேம்பியாவில் முபல்லிக்காக தொண்டாற்றும் நற்பாக்கியத்தை பெற்று வருகின்றார். அவர்களால் தாயின் மரணத்தின்போது பாகிஸ்தான் செல்ல முடியவில்லை. அல்லாஹ் மர்ஹூமாவுடன் கருணையுடனும், பாவமன்னிப்புடனும் நடந்து கொள்வானாக. மேலும இவர்களது பிள்ளைகளுக்கு இவர்களின் நன்மைகளை தொடச் செய்வதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

அடுத்த ஜனாஸா ஹைதராபாதைச் சார்ந்த மதிப்பிற்குரிய முஹம்மது அஹ்மது அன்வர் சாஹிப் அவர்களுடையதாகும். 22 மே அன்று தனது 94 வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

இவர்களது குடும்பத்தில் அஹ்மதிய்யத் இவர்களது பாட்டனாரான ஷேக் தாவூது அஹ்மது சாஹிப் அவர்கள் மூலமாக வந்தது. சிறு வயதில் அன்னாரது தந்தை தனது இரு மகன்களை அதாவது முஹம்மது அஹ்மது சாஹிப் மற்றும் முஜீப் அஹ்மது சாஹிப் ஆகியோரை கல்வி பயில்வதற்காக காதியான் அனுப்பி வைத்தார்கள். இவர்களுக்கு காதியானிலுள்ள மினாரத்துல் மஸீஹில் பாங்கு கொடுக்கக்கூடிய நற்பேறும் கிடைத்துள்ளது. முஹம்மது அஹ்மது சாஹிப் ஆரம்பம் முதலே ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடன் இருந்தார்கள். பிரிவினைக்குப் பிறகு ஹுஸூர் அவர்களுடன் ரப்வா வந்து விட்டார்கள். பிறகு மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் ஓட்டுனராக பணிபுரிந்து வந்தார்கள். பிறகு அவர்கள் கல்வியை முழுமை செய்தார்கள். பிஸிக்கல் எஜுகேஷனனில் டிப்ளமோ செய்தார்கள். பிறகு எம்.ஏ செய்தார்கள். பிறகு தஃலீமுல் இஸ்லாம் காலேஜில் நீண்ட காலம் தொண்டாற்றும் நற்பாக்கியத்தை பெற்றார்கள்.

73 முதல் 76 வரை மூன்று ஆண்டுகள் வக்ஃப் செய்து கேம்பியா சென்று விட்டார்கள். 78 முதல் 86 வரை நைஜீரியாவில் பெண்கள் காலேஜில் ஆசிரியராக இருந்தார்கள். 86 ல் பாகிஸ்தானிலிருந்து ஜெர்மனி ஹிஜ்ரத் செய்தார்கள். மேலும் 2009 முதல் இலண்டன் வந்து விட்டார்கள். பிறகு இங்கேயே இருந்தார்கள்.

மர்ஹூம் அவர்களுக்கு 4 மகன்கள் மற்றும் 2 மகள்கள் இருக்கின்றனர். அனைவருக்கும் திருமணம் ஆகி விட்டது. மர்ஹூம் கஸா போர்டின் நாயிப் சதராக இருந்தார்கள். ஒரு நேரத்தில் ஜெர்மனி ஜமாஅத்தின் நாயிப் ஆடிட்டராக இருந்தார்கள்.

இவர்களது மகள் அம்மத்துல் மஜீது சாஹிபா கூறுகின்றார்கள்: எனது தந்தை துஆக்களின் கருவூலம் ஆவார். இவர்கள் தனது வாழ்க்கையில் தொழுகை, திருக்குர்ஆனை ஓதுதல், நோன்பு நோற்பது மற்றும் கிலாஃபத்திற்கு தொண்டு செய்வது ஆகியவற்றையே தமது பணியாக கருதி வந்தார்கள். மேலும் தனது அனைத்து பிள்ளைகளுக்கும் இதனையே போதித்து வந்தார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் கருணையுடனும், பாவமன்னிப்புடனும் நடந்து கொள்வானாக.

இன்றைய கடைசி ஜனாஸா சிரியாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய சலீம் ஹஸன் அல்ஜாபீ சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் 30 ஜூன் அன்று தனது 92 வது வயதில் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

இவர்களது மகன் லுப்னா அல்ஜாபீ சாஹிப், மற்றும் பேத்தி ஹிபா அல்ஜாபீ சாஹிபா டாக்டர் பிலால் தாஹிர் சாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். இவர்கள் இலண்டனில் இருக்கின்றார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்: சலீம் ஜாபீ சாஹிப் அவர்கள் டிசம்பர் 1928 ஆம் ஆண்டு சிரியாவில் பிறந்தார்கள். 18 வது வயதில் ஜாபீ சாஹிப் அவர்களுக்கு அஹ்மதிய்யத் பற்றிய அறிமுகம் ஒரு சாதாரண அஹ்மதி விவசாயியான மதிப்பிற்குரிய அபூ ஹஸப் அவர்கள் மூலமாக கிடைத்தது. எனவே ஜாபீ சாஹிப் இஸ்திஹாரா செய்தார்கள். பிறகு கனவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைக் கண்டார்கள். மேலும் கனவிலேயே பைஅத்தும் செய்தார்கள்.

பிறகு அபூ ஹஸப் சாஹிப் அவர்கள் இவர்களுக்கு இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம் என்ற புத்தகத்தின் அரபி நூலை வழங்கினார்கள். இந்த புத்தகத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் புகைப்படத்தைக் கண்டு பிறகு அப்போதைய சிரியா ஜமாஅத்தின் அமீரான மதிப்பிற்குரிய முனீருல் ஹுஸ்னி சாஹிப் அவர்களிடம் சென்று பைஅத் செய்தார்கள். இவர்களது குடும்பத்திலிருந்து கடும் எதிர்ப்பு வந்தது. ஆனால் மர்ஹூம் நிலைத்து நின்றார்கள்.

பிறகு இவர்களுக்கு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் காலத்தில் பாகிஸ்தான் செல்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு ஹுஸூர் அவர்களுடன் 6 வருடங்கள் ரப்வாவில் கழித்தார்கள். அங்கு மார்க்க கல்வியை கற்றார்கள். மேலும் உருது மொழியையும் கற்றார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்களின் கூற்றிற்கேற்ப பாகிஸ்தானிலேயே இவர்கள் திருமணம் செய்து

கொண்டார்கள். ஹுஸூர் அவர்கள் இவர்களது நிக்காஹ்வை நடத்தினார்கள். இவர்களது மனைவி பாகிஸ்தானைச் சார்ந்தவர் ஆவார்கள்.

மர்ஹூம் அவர்களின் பேத்தி ஹிபா ஜாபீ சாஹிபா எழுதுகின்றார்கள்: எங்களது பாட்டனார் எப்போதும் எங்களுக்கு அறிவுரை செய்து வருவார்கள். மேலும் தஃலீம் மற்றும் தர்பிய்யத் ஆகியவற்றிற்கான நேரத்தை ஒதுக்கி வந்தார்கள். மேலும் ஆன்மீக முன்னேற்றம் என்பது கிலாஃபத்துடன் தொடர்பு வைத்திருப்பதிலேயே என்பதில் அழுத்தம் கொடுத்து வந்தார்கள்.

அன்னாரது மனைவி சில வருடங்களுக்கு முன்பு வஃபாத்தாகி விட்டார்கள். இவர்களுக்கு 6 பிள்ளைகள் இருக்கின்றனர். ஒரு மகன் மருத்துவர் ஆவார். நயீமுல் ஜாபீ சாஹிப் 15 வது வயதில் காணாமல் போய் விட்டார். இப்போது வரை இவர்களைப் பற்றிய எந்த விவரமும் தெரியவில்லை. வஸீம் அல்ஜாபீ சாஹிப் போலந்து ஜமாஅத்தின் உறுப்பினர் ஆவார்.

இதேபோன்று இரண்டு மகள்கள் இருக்கின்றனர். இரண்டு மகன்கள் சிரியாவில் இருக்கின்றார்கள். ஹிபா ஜாபி சாஹிபா அவர்கள் இங்கு ஜமாஅத்திற்கு தொண்டாற்றி வருகின்றார்கள். குறிப்பாக புத்தகங்களை மொழியாக்கம் செய்வது தொடர்பாக நல்ல சிறந்த ஆலோசனைகளை வழங்குவார்கள். மேலும் பணியும் செய்கின்றார்கள். மியான் தாஹிர் பிலால் சாஹிப் அவர்களும் மொழியாக்கம் செய்கின்றார்கள். அவர்களுக்கு இவர்கள் உதவி செய்வார்கள். அல்லாஹ் இவர்களது கலப்பற்றத்தன்மை மற்றும் பற்றுணர்வில் பரக்கத்தை ஏற்படுத்துவானாக. மேலும் இவர்களது ஞானத்தையும் அதிகரிப்பானாக.

இவர்களது மகள் லுப்னா அப்துல் ஹபீர் ஜாபீ எழுதுகின்றார்கள்: எங்களை சடங்கு சம்பிரதாயத்தை பின்பற்றுவதிலிருந்து தடுத்து வந்தார்கள். அல்லாஹ்வுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது மற்றும் தப்லீக் செய்வதற்கு அறிவுரை கூறுவார்கள். ஏழைகளுக்காக அதிகமாக செலவு செய்வார்கள். மர்ஹூம் மூலமாக சிரியா மற்றும் லப்னான் நாட்டில் பல மக்கள் பைஅத் செய்துள்ளனர். இவர்களில் கிறித்தவர்களும் அடங்குவர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: எங்களுக்கு அவர்கள் வழங்கிய இறுதி வஸிய்யத் என்னவென்றால், கிலாஃபத்துடன் எப்போதும் இணைந்திருங்கள். மேலும் காலத்தின் கலீஃபாவின் கட்டளைகளின்படி செயல்படுங்கள். தப்லீக் செய்வதில் சோம்பேறித்தனம் காட்டாதீர்கள். எப்போதும் எல்லா பணிகளையும் துஆவுடன் மேற்கொள்ளுங்கள். மேலும் உண்மையின் வழியில் எந்தவொரு அநீதியையும் பொருட்படுத்தாதீர்கள் என்பதே ஆகும்.

லப்னானின் சத்ர் ஜமாஅத் அவர்கள் எழுதுகின்றார்கள்: அஹ்மதியத்தை அறிந்து கொள்வதற்கு முன்பாக நாங்கள் சலீம் ஜாபி சாஹிப் அவர்களின் நூல்களை படித்து வந்தோம். அதில் இமாம் மஹ்தியின் வருகை மற்றும் அவரது ஜமாஅத்தின் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. நாங்கள் அனைத்தையும் படித்த பிறகு அவர்கள் எங்களிடம், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றியும், அவர்களது ஜமாஅத்தைப் பற்றியும் எடுத்துக் கூறியவாறு பைஅத் செய்யுமாறு கூறினார்கள்.

இது இவர்களது பாணியாகும். இது எல்லா இடத்திலும் சரியாக இருக்கும் என்பது அவசியமல்ல. ஆனால் இவர்கள் இவ்வாறு தப்லீக் செய்தார்கள். அதிகமானவர்களை தப்லீக் செய்து அஹ்மதியாக்கினார்கள்.

மேலும் அவர்கள் கூறினார்கள்: இப்போது எனது புத்தகத்தை விட்டு விட்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் அவர்களது கலீஃபாக்களின் புத்தகத்தை படியுங்கள்.

பிறகு அவர்கள் கூறுகின்றார்கள்: லப்னானின் ஆரம்ப கால அஹ்மதிகள் மர்ஹூம் மூலமாகவே பைஅத் செய்தோம். நாங்கள் அவர்களது பேருபகாரத்தை மதிக்கின்றோம். மேலும் அதற்காக நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் அவர்களுக்காக துஆ செய்கின்றோம்.

சிரியாவைச் சார்ந்த தற்போது கனடாவில் வசித்து வருகின்ற கஸக் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் சிரியாவில் ஒரு சிறிய ஜமாஅத்தின் தலைவராக இருந்தேன். அப்போது பல முறை சலீம் ஜாபீ சாஹிப் அவர்களை சந்தித்திருக்கின்றேன். எப்போது அவர்களுடன் இருக்கும்போது கிலாஃபத்தைப் பற்றிய பேச்சு வரும்போது அவர்கள், கிலாஃபத்தின் காலடியில் எனது மரணம் வர வேண்டும் என்பதே எனது விருப்பமாகும் என்று அடிக்கடி கூறி வருவார்கள்.

முபல்லிக் மீர் அஞ்சம் பர்வேஸ் சாஹிப் அவர்கள் கூறுகின்றார்கள்: எப்போது கிலாஃபத்தைப் பற்றிய விஷயம் கூறப்பட்டாலும் உடனே தலை வணங்கி விடுவார்கள். மேலும் ஜமாஅத் அமைப்பு என்ன கட்டளை எனக்கு வழங்கினாலும் அதற்கு நான் கட்டுப்படுவேன் என்று வெளிப்படையாக கூறிவார்கள்.

2011 ஆம் ஆண்டு சிரியாவிலிருந்து யூ.கே ஆண்டு மாநாட்டிற்கு வந்திருந்தார்கள். அவர்கள் கூறினார்கள்: எனது விருப்பம் என்னவென்றால், காலத்தின் கலீஃபாவின் காலடியில் எனது உயிர் பிரிய வேண்டும் என்பதே ஆகும். எனக்கு இதை விட மிகப்பெரிய வேறு எந்த கண்ணியமும் கிடையாது..

ஜாபீ சாஹிப் மூலமாக அதிகமான மக்களுக்கு அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்ளும் பாக்கியம் கிடைத்தது. மேலும் இவர்களில் பலர் ஜமாஅத் மற்றும் கிலாஃபத் மீது கலப்பற்ற அன்பையும் கொண்டிருக்கின்றனர். மேலும் கலப்பற்ற அஹ்மதிகளும் ஆவர். அதிகமானோர் எனக்கு கடிதம் எழுதியுள்ளனர். அதாவது இவர்களிடமிருந்து நாங்கள் நிறைய விஷயங்களை கற்றிருக்கின்றோம். மேலும் இவர்கள் மூலமாக நாங்கள் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டோம்.

மேலும் ஜாபீ சாஹிப் கூறி வந்தார்கள்: ஹஸ்ரத் மவ்லானா குலாம் ரஸூல் ராஜீகி சாஹிப் என்னிடம் கூறினார்கள். அதாவது எனது ஹயாத்தே குத்ஸி என்ற நூலை மொழியாக்கம் செய்யுங்கள். ஏனென்றால் அரபு மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபாக்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை தெரிந்து கொள்வதற்காக இந்த நூலை மொழியாக்கம் செய்யுங்கள் என்று கூறினார்கள். பிறகு அவர்கள் ஹயாத்தே குத்ஸி என்ற நூலை மொழியாக்கம் செய்தார்கள்.

அரபியை நன்கு அறிந்தவர் ஆவார்கள். உருது மொழியும் அவர்களுக்குத் தெரியும். நல்ல முறையில் பேசுவார்கள். ஃபார்ஸியும் பேசுவார்கள். ஆங்கிலமும் பேசுவார்கள்.

2005 ஆம் ஆண்டு நான் காதியான் சென்றபோது அங்கு அவர்கள் என்னை சந்தித்தார்கள். குறுகிய நேர சந்திப்பாக இருந்தது. ஆனால் மிகவும் பணிவுடன் என்னை சந்தித்தார்கள். பிறகு யூ.கே வில் என்னை சந்தித்தார்கள். மாநாட்டிற்கு வந்திருந்தார்கள். இங்கும் மிகவும் பணிவுடன் என்னிடம், அஹ்மதிய்யா கிலாஃபத் மீது எனக்கு முழுமையான நம்பிக்கை இருக்கின்றது. முழுமையான கட்டுப்படுதல் மற்றும் முழுமையான கொள்கைப் பிடிப்பை நான் வைத்துள்ளேன். மேலும் ஜமாஅத் அமைப்போடு எப்போதும் இணைந்திருப்பதற்காக எனக்காக துஆ செய்யுங்கள் என்று கூறினார்கள்.

அல்லாஹ் இவர்களது பிள்ளைகளுக்கும், சந்ததிகளுக்கும் முழுமையான பற்றுணர்வுடன் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்துடன் இணைந்திருக்கச் செய்வானாக. மேலும் இவர்களுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. இப்போது ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் கூறியதுபோன்று இவர்கள் அனைவரது ஜனாஸா காயிப் தொழுகையை நான் தொழ வைப்பேன்.

......☆......☆......☆......

# ஜும்ஆ பேருரை

**இந்த அமைப்பு நிறுவப்பட்டதன் உண்மையான நோக்கம் என்னவென்றால், மக்கள் உலகத்தின் அசுத்தத்திலிருந்து வெளியேற வேண்டும். மேலும் உண்மையான தூய்மையை அடைய வேண்டும். மேலும் வானவர்களைப் போன்ற வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு உலகில் ஏற்பட்ட முதல் ஒருமித்த கருத்தாக இது இருந்தது. மேலும் இதில் ஹஸ்ரத் மஸீஹ் அவர்களின் வஃபாத் தொடர்பாக ஒருமித்த முடிவு எடுக்கப்பட்டிருந்தது**

**நான் வருவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, முஸ்லிம்களை உண்மையான தக்வா மற்றும் பரிசுத்தத்தில் நிலைநாட்டுவது ஆகும். இரண்டாவது , கிறித்தவர்களின் சிலுவையை முறிப்பதாகும். அவர்களின் செயற்கை இறைவன் தென்படக் கூடாது. (ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்)**

**அஹ்மதிகள் காத்தமன் நபிய்யீனின் அந்தஸ்தை எல்லோரையும் விட அதிகமாக புரிந்துள்ளனர். இந்த புரிதலை எங்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களே வழங்கியுள்ளார்கள்**

**என்னுடன் ஒருவர் கூட இல்லையென்றாலும் கூட, ஒருவரும் எனக்கு உதவி செய்யவில்லை என்றாலும் அப்போதும் எனது இயக்கம் வெற்றி பெறும் என்று நான் திட உறுதி கொள்கிறேன்**

**நான் உண்மையாகவே கூறுகிறேன். இறைவன் மீது சத்தியம் செய்து கூறுகிறேன். நானும் எனது ஜமாஅத்தினரும் முஸ்லிம்கள் ஆவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் திருக்குர்ஆன் மீது ஓர் உண்மையான முஸ்லிம் எவ்வாறு ஈமான் கொள்ள வேண்டுமோ அவ்வாறு ஈமான் கொள்கின்றனர். ஓர் அணு அளவு இஸ்லாத்தை விட்டு வெளியில் காலெடுத்து வைப்பதை அழிவுக்குக் காரணமானது என்று உறுதியாக நம்புகிறேன். இதுவே என் மார்க்கம் ஆகும். எவ்வளவு அருள்களும் வளங்களும் ஒருவர் பெற முடியுமோ அது முழுக்க முழுக்க ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுததாலும் முழுமையான நேசத்தினாலும்தான் பெற முடியும். அது அல்லாமல் முடியாது**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டண் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 31 ஜுலை 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **வஃபா** மாதம் **31 ஆம் தேதி** ஆற்றிய **ஜும்ஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நாம் ஈது (ஹஜ்ஜுப் பெருநாள்) தொழுகையையும் தொழுதோம். இன்று ஜும்ஆ நாளும் ஆகும். ஈதும் ஜும்ஆவும் ஒரே நாளில் ஒன்றிணைந்தால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டல் என்னவென்றால், விரும்புபவர் ஜும்ஆவுக்குப் பதிலாக ளுஹர் தொழுது கொள்ளலாம். அதற்கு அனுமதி உள்ளது. அத்துடன் ஓரிடத்தில் இதுபோன்ற சந்தர்ப்பத்தில் நாம் ஜும்ஆ தொழுவோம் என்று அன்னார் கூறினார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் ஜும்ஆ தொழுதார்கள்.

(சுனன் இப்னு மாஜா.... ஹதீஸ் எண் 1310, 1311, 1312)

எனவே அந்தக் கூற்றின் ஒளியில் நான் அமீர் சாஹிபிடம், எவராவது ளுஹர் தொழ விரும்பினால் ஜமாஅத்தாக ளுஹர் தொழுது கொள்ளட்டும் என்று கூறினேன். ஜும்ஆ தொழுகை நடத்தாவிட்டாலும் பரவாயில்லை. ஏனெனில் இன்றைய சூழலில் அதிகம் பேர் பள்ளிவாசலில் ஜும்ஆவுக்கு வந்து ஒன்றுகூடவும் முடியாத நிலை உள்ளது. வீடுகளில் இருக்கிறார்கள். வீடுகளை விட்டு வெளியே இருந்தால் முன்னர் தொழுததுபோன்று தொழுது கொள்ள முடியும். ஒருவருக்கு அதிகமான பணிகள் இருந்தால் ளுஹரும் தொழுது கொள்ளலாம். ஆனால், நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நடைமுறைக்கேற்ப இன்று ஜும்ஆ தொழுகிறோம்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களது காலத்தில் ஒருமுறை இதுபோன்ற ஒரு சந்தர்ப்பத்தில் ஈதுல் அழ்ஹாவும் ஜும்ஆவும் ஒன்றாக வந்தபோது பல்வேறு மக்கள் தமது அபிப்பிராயத்தை எடுத்து வைத்தார்கள். ளுஹர் தொழ வேண்டும் என்றனர். ளுஹர் தொழுதால் போதும். ஜும்ஆ தொழ வேண்டாம் என்றனர். அன்னார் அதற்குப் பதிலாக அழகிய பதில் ஒன்றைத் தந்தார்கள். ளுஹர் தொழுகைக்கு அழுத்தம் கொடுத்தவர்களுக்கு இதனைக் கூறினார்கள். நமது இறைவன் எத்தகைய வள்ளலாக இருக்கிறான் என்றால் அவன் நமக்கு இரண்டு ஈதுகளைத் தந்துள்ளான். ஒருவருக்கு இரண்டு சப்பாத்திக்கள் நெய் தடவப்பட்டு கிடைத்தால், அதில் ஒன்றை அவர் ஏன் மறுக்கப்போகிறார்? ஒருவருக்கு குறிப்பான நிர்ப்பந்தம் இருந்தால் தவிர அவர் இரண்டையுமே வாங்கிக் கொள்வார்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுமதி தந்துள்ளார்கள். ஒருவர் நிர்பந்தத்தின் காரணமாக ளுஹர் தொழுதால், ஜும்ஆ தொழாமல் இருந்தால் அவர் மற்றவரையும் அவ்வாறு செய்யுமாறு வலியுறுத்தக் கூடாது. சிலர் இரண்டு தொழுகைகளையும் (ஈது, ஜும்ஆ) நிறைவேற்ற வாய்ப்புப் பெறுகிறார் என்றால் மற்றவர் அவரை ஆட்சேபனை செய்வதும், சலுகையைப் பயன்படுத்தவில்லை என்று கூறுவதும் தேவையில்லை. சலுகை இருக்கிறதுதான். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய செயலிலிருந்து நமக்கு தெரிய வருகிறது. நாம் ஜும்ஆ தொழுவோம் என்று அன்னார் கூறியுள்ளார்கள்.

(குத்பாத்தே மஹ்மூது, தொகுதி 2 பக்கம் 208–210, குத்பா ஈதுல் அழ்ஹா 11 பிப்ரவரி 1938)

எவ்வாறிருப்பினும், நாம் இன்று ஜும்ஆ தொழுகிறோம். ஆனால் குத்பா சிறியதாகவே தருவேன். இதற்காக நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில மேற்கோள்களை எடுத்துள்ளேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது வருகையின் நோக்கத்தைப் பற்றி கூறுகிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் காத்தமுன் நபிய்யீன் என்று நம்ப வேண்டும் என்றும், உள்ளபடி அன்னார் உயிருள்ள நபி என்பது பற்றியும் விளக்கமான வழிகாட்டல் வழங்கியுள்ளார்கள். ஹஸ்ரத்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மேன்மை மற்றும் சிறப்புகள் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

தமது எதிரிகள் நம்மிடம் ஆட்சேபனை செய்கிறார்கள். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தகுதியையும் மேன்மையையும் குறைக்கிறோம் என்கிறார்கள். நமது எதிரிகள், பாகிஸ்தான் சட்டசபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி விட்டு அதற்காகப் பெருமிதம் கொள்கிறார்கள். பாருங்கள்! நாங்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மகத்துவமிக்க பெயருடன் காத்தமுன் நபிய்யீன் என்று எழுதுவதைக் கட்டாயமாக்கியதன் மூலம் எத்தனை வலுவாக அன்னார் மீது அன்பையும் அன்னாரின் மகத்துவத்தையும் வெளிப்படுத்தி இருக்கிறோம் என்று கூறுகின்றார்கள்.

அவர்களின் உள்ளமும் உள்ளபடியே இதற்கு சாட்சி கூறுகிறது எனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய முன்மாதிரியின்படி செயல்பட வைக்கிறது எனில் நிச்சயமாக அது சிறந்த விஷயமாக இருக்கும். ஆனால், இவர்களின் செயல் இவர்களை அன்னாரை விட்டு நீண்ட தூரம் விலக்கி விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தந்த போதனையை விட்டு விலக்கி விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்திலிருந்து திரும்பி வந்து அவர்களின் போதனையைச் செவிமடுத்தால், அதன்படி அமல் செய்தால் முஸ்லிம்கள், முஸ்லிம்களின் கழுத்தை வெட்டுபவர்களாக இருந்திருக்கவே மாட்டார்கள்.

காலத்தின் இமாம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மை அடியாரிடம் பைஅத் செய்ய ஓடி வந்திருப்பார்கள். காத்தமுன் நபிய்யின் என்ற சொல்லை எழுதுவதை கட்டாயமாக்குவதன் மூலம் பெரிய காரியம் செய்து விட்டதாக நினைக்கின்றனர். அஹ்மதிகளின் வழியை அடைத்து விட்டதாகவும் நினைக்கின்றனர். இந்த அறிவுக் குருடர்களுக்கு அஹ்மதிகள்தான் காத்தமுன் நபிய்யீன் உடைய மகத்துவத்தைப் புரிந்துள்ளார்கள் என்பது தெரியாது.

இந்தப் புரிதிறனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு வழங்கினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தைகளில் ஒரு சக்தி இருக்கிறது. அதன் அருகில் கூட இவர்களால் செல்ல முடியாது. அன்னாரின் ஒவ்வொரு நொடியும் அமலும் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களின் மீது உள்ள பேரன்பு, நேசத்தில் நிறைந்திருந்தது. அதனை இவர்களால் சிந்திக்கக்கூட இயலாது.

இது பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய எண்ணற்ற வழிகாட்டல்கள், எழுத்துக்கள், கூற்றுகள் உள்ளன. இப்போது நான் முன்மாதிரியாக அதில் ஒன்றிரண்டை எடுத்து வைக்கிறேன். தமது வருகையின் நோக்கம், தமது இயக்கம் பற்றி எடுத்துரைத்தவாறு தமது எதிரிகளை விளித்துக் கூறுகிறார்கள்:

நான் வருவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, முஸ்லிம்களை உண்மையான தக்வா மற்றும் பரிசுத்தத்தில் நிலைநாட்டுவதும், அவர்கள் எத்தகைய முஸ்லிம்களாக ஆக வேண்டும் எனில், முஸ்லிம் என்ற சொல்லில் அல்லாஹ் என்ன நுட்பத்தை வைத்துள்ளானோ அதனை நிறைவேற்ற வேண்டும். முழுமையான கட்டுப்படுதலுடன் அல்லாஹ்வுடைய கட்டளையைப் பின்பற்ற வேண்டும்.

எனது வருகையின் இரண்டாவது நோக்கம் என்னவெனில், சிலுவையை முறிப்பதாகும். அவர்களின் செயற்கை இறைவன் தென்படக் கூடாது. உலகம் அதனை முற்றிலும் மறந்து விட வேண்டும். ஒரே இறைவனை வணங்க வேண்டும். எனது இந்த நோக்கங்களைப் பார்த்து விட்டு இம்மக்கள் என்னை ஏன் எதிர்க்கிறார்கள்? அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். எந்தப் பணி நயவஞ்சகத்தின் அழுக்கு கலந்ததாக இருக்குமோ அது தன்னாலேயே தமது விஷத்தாலேயே அழிந்து விடும். உள்ளத்திலுள்ள நயவஞ்சகம், அழுக்கு ஆகியவை நல்ல விளைவைத் தராது. எனவே, அவர்களின் பணி விரைவில் முடிந்தே போய் விடும். ஒரு பொய்யன் வெற்றி பெற முடியுமா?

إِنَّ اللّٰهَ لَا يَهْدِي مَنْ هُوَ مُسْرِفٌ كَذَّابٌ அதாவது நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறிய பொய்யனுக்கு நேர்வழி காட்ட மாட்டான். **(40:29)**

பொய்யனின் அழிவுக்கு அவனது பொய் மட்டுமே போதுமானது. ஒரு பொய் அடியான் அழிந்து போவதற்கு அவனது பொய்யே போதுமானது. ஆனால் ஒரு பணி அல்லாஹ்வின் கம்பீரம் மற்றும் அவனது ரஸூலின் பரக்கத்துகளை வெளிப்படுத்துகின்றது எனில் அவர்களின் விதிமுறைகளை நிரூபித்துக் காட்டுகிறது எனில் அது அல்லாஹ்வின் கரங்களால் நடப்பட்ட செடி எனில், அதனை மலக்குகளே பாதுகாக்கின்றனர். அவ்வியக்கத்தைப் பாதுகாப்பது அடியார்களின் பணியல்ல. அல்லாஹ் அப்பணியைத் தொடங்கினான். மலக்குகள் அதனைப் பாதுகாக்கின்றனர். அதனை அழிப்பவர் யார்? இது ஓர் அறைகூவல் ஆகும். எங்கு எதிர்ப்பு ஏற்படுகிறதோ அங்கு அஹ்மதிய்யா ஜமாஅத் வளர்கிறது.

அவர்கள் கூறினார்கள்: நினைவில் கொள்ளுங்கள். எனது இயக்கம் எனது கடமை வியாபாரம் எனில் அதன் பெயரும் அடையாளமும் அழிந்துபோய் விடும். ஆனால் அது அவனிடமிருந்து வந்திருந்தால் நிச்சயமாக அவனிடம் இருந்தே வந்துள்ளது. பிறகு முழு உலகும் அதனை எதிர்த்தாலும் அது வளரும்; பரவும்; மலக்குகள் அதனைப் பாதுகாப்பார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: என்னுடன் ஒருவர் கூட இல்லையென்றாலும் கூட, ஒருவரும் எனக்கு உதவி செய்யவில்லை என்றாலும் அப்போதும் எனது இயக்கம் வெற்றி பெறும் என்று நான் திட உறுதி கொள்கிறேன்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் எதிர்ப்பைப் பொருட்படுத்தவில்லை. அதனை நான் இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கு அவசியம் என்று கருதுகிறேன். இறைவனது ஒரு நியமிக்கப்பட்ட நபர் அல்லது கலீஃபா உலகில் வந்தபோது மக்கள் அவரை அமைதியாக ஏற்றுக் கொண்டு விட்டதாக எவரும் உலகில் இல்லை. உலகின் வியத்தகு நிலைமை, மனிதன் எவ்வளவு நல்லியல்பு கொண்டிருந்தாலும் மற்றவர் அவரை வெறுமனே விட்டு விடுவதில்லை. அவர்கள் ஆட்சேபனை செய்து கொண்டே இருக்கிறார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் உடைய அருளால் நமது இயக்கத்தின் முன்னேற்றம் சாதாரண நிலையையும் விட அதிகமாக ஏற்படுகிறது.

நாம் இன்று பார்க்கிறோம். **207** நாடுகளில் அவர்களை ஏற்றுக் கொண்ட களங்கமற்ற மக்கள் உள்ளனர். நூற்றுக்கணக்கில் உள்ளனர் என்று அக்காலத்தில் அன்னார் கூறினார்கள். தற்போது வருடாவருடம் இலட்சக்கணக்கில் பைஅத்துகள் நடக்கின்றன.

அவர்கள் கூறுகிறார்கள்: இந்த இயக்கம் நிறுவப்பட்டதன் அசல் நோக்கம் மக்கள் உலக அசுத்தங்களை விட்டு வெளியேறி அசல் தூய்மையைப் பெற வேண்டும். மலக்குகளைப் போன்ற வாழ்வை மேற்கொள்ள வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி **8** பக்கம் **148–149**)

அன்னாரது இந்த வழிகாட்டலுக்கேற்ப நமக்கும் கூட பொறுப்பு உள்ளது. நாம் சரியான இஸ்லாமிய போதனைக்கேற்ப வாழ்வை அமைக்க வேண்டும். இதுவே எதிரிகளின் வாயை அடைக்க அசல் நடைமுறையாகும்.

பிறகு தமது ஜமாஅத்தின் முழுமையான ஈமான் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உண்மையான கட்டுப்படுதல் குறித்து அறிவிப்பு செய்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நான் உண்மையாகவே கூறுகிறேன். இறைவன் மீது சத்தியம் செய்து கூறுகிறேன். நானும் எனது ஜமாஅத்தினரும் முஸ்லிம்கள் ஆவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மற்றும் திருக்குர்ஆன் மீது ஓர் உண்மையான முஸ்லிம் எவ்வாறு ஈமான் கொள்ள வேண்டுமோ அவ்வாறு ஈமான் கொள்கின்றனர். ஓர் அணு அளவு இஸ்லாத்தை விட்டு வெளியில் காலெடுத்து வைப்பதை அழிவுக்குக் காரணமானது என்று உறுதியாக நம்புகிறேன். இதுவே என் மார்க்கம் ஆகும். எவ்வளவு அருள்களும் வளங்களும் ஒருவர் பெற முடியுமோ அது முழுக்க முழுக்க ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முழுமையாகக் கட்டுப்படுததாலும் முழுமையான நேசத்தினாலும்தான் பெற முடியும். அது அல்லாமல் முடியாது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விடுத்து வேறு எங்கும் நேர்வழி இல்லை. ஆம், இதுவும் உண்மையாகும். ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் பூத உடலுடன் வானத்தில் இருக்கிறார் என்றும் ஒருபோதும் நான் ஈமான் கொள்ளவில்லை. இதுவரை இதே நிலைப்பாட்டில் இருக்கிறேன். இவ்வாறு நம்புவதால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இழிவும் மதிப்பின்மையும் ஏற்படுகிறது. நான் ஒரு வினாடி கூட அவமானத்தை அன்னாருக்கு ஏற்படுத்துவதை ஏற்க முடியாது.

அனைவருக்கும் தெரியும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் 63 வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். மதீனா தய்யிபாவில் அன்னாரது அடங்கப்பட்ட இடம் உள்ளது. ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கில் இலட்சக்கணக்கில் மக்கள் செல்கிறார்கள். பிறகு மஸீஹ் பற்றி, மரணம் அடைந்ததாக ஈமான் கொள்வதும், மரணத்தை அவருக்காகப் பொருத்துவதும் மதிப்பற்ற செயல் ஆகும் எனில், பிறகு நான் கூறுகிறேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி அந்த இழிவை மதிப்பின்மையை ஏன் செய்கிறீர்கள்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி இறந்து விட்டார்கள் என்று ஏன் கூறுகிறீர்கள்? அடக்கம் செய்யப்பட்டதாகக் கூறுகின்றீர்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள் என்று நீங்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் கூறுகிறீர்கள்.

மவ்லூது கான் மிகவும் மகிழ்ச்சியுடன் அன்னாரது மரணம் பற்றிய சம்பவங்களைப் பேசுகிறார். குஃப்பார்களுக்கு எதிரில் மிகவும் தைரியமாக அன்னார் இறந்து விட்டார்கள் என்று ஏற்றுக் கொள்கிறீர்கள். பிறகு ஹஸ்ரத் ஈஸா உடைய மரணத்தை ஏற்பதில் என்ன தடங்கல் உள்ளது? என்பது என்னால் புரிய முடியவில்லை. இப்படி கண்ணீர் வடிக்கிறீர்கள். இப்போதும் சில ஆலிம்கள் கூச்சலிடுகிறார்கள். பாருங்கள்! இவர்கள் என்ன செய்து விட்டார்கள். ஈஸா (அலை) அவர்களை மறுத்து விட்டார்கள் என்கின்றனர். இன்னும் சிலர் ஈஸா வருவார். இவர் அல்ல என்று கூறுகிறார்கள். அவர் இப்போது உயிருடன் இருக்கிறார் என்கின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: நமக்கு எந்தக் கவலையும் இல்லை. நீங்கள் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றி மரணம் என்ற சொல்லைக் கேட்டு கண்ணீர் வடிக்கிறீர்கள். ஹஸ்ரத் காத்தமுன் நபிய்யீன் மற்றும் ஈருலகத் தலைவர் விஷயத்தில் மகிழ்ச்சியுடன் அதனை (மரணத்தை) ஏற்றுக் கொள்கிறீர்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய செருப்பைக் கழற்றுவதற்குக்கூட தகுதியற்ற மனிதரைக் குறித்து உயிருடன் இருப்பதாகக் கூறுகிறீர்கள். அந்த மனிதர் (ஈஸா) பற்றி மரணம் என்ற சொல் வாயிலிருந்து வந்தால் உங்களுக்கு கோபம் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உயிருடன் இருந்தால் குற்றமில்லை. ஏனெனில் அன்னார் மகத்தான நேர்வழியைக் கொண்டு வந்தார்கள். அதற்கு ஈடானது உலகில் காணப்படவில்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு செயல் முன்மாதிரி காட்டினார்களே அதுபோன்ற ஒன்றை ஆதம் நபியிலிருந்து இதுவரை உலகில் எவரும் காட்ட முடியாது.

நான் உங்களிடம் உண்மையாகவே கூறுகிறேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இருப்பு உலகிற்கும் முஸ்லிம்களுக்கும் எவ்வளவு தேவையோ அவ்வளவு மஸீஹின் இருப்பு உலகிற்குத் தேவை இல்லை. பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இருப்பு ஓர் அருளுக்குரிய இருப்பாகும். அன்னாரது மரணத்தைக் கேட்டு சஹாபாக்கள் பைத்தியமாக ஆகி விட்டனர். ஹஸ்ரத் உமர் வாளை உருவியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மரணித்தவர் என்று எவராது கூறினால் நான் அவரது தலையைத் தனியே எடுத்து விடுவேன் என்று கூறினார்.

இந்த ஆவேசமான நேரத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஒரு சிறப்பான ஒளியை வழங்கினான். அன்னார் எல்லாரையும் ஒன்று கூட்டினார்கள். ஒரு குத்பா கொடுத்தார்கள். அதனை இப்போதும் படிக்கலாம்.

وَمَا مُحَمَّدٌ إِلَّا رَسُولٌ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ

அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் ஒரு தூதர் மட்டுமே ஆவார்கள். அவர்களுக்கு முன்னர் தோன்றிய அனைவரும் மரணித்து விட்டனர். (3:145)

அவர்கள் கூறுகிறார்கள்: சிந்தனை செய்யுங்கள். சிந்தித்துக் கூறுங்கள். அபூபக்ர் ஸித்திக் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வஃபாத்தின்போது ஏன் இந்த வசனத்தை ஓதினார்கள். அன்னாருக்கு என்ன நோக்கம் இருந்தது? எல்லா சஹாபாக்களும் அங்கு இருந்தனர். நிச்சயமாக என்னால் கூற முடியும். நீங்கள் மறுக்க முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வஃபாத்தின் காரணத்தால் சஹாபாக்களின் உள்ளத்தில் கடும் துயரம் இருந்தது. அன்னார் மரணம் சற்று முன்பாகவே நடந்து விட்டதாகக் கருதினர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மரணம் குறித்து கேட்க விரும்பவில்லை.

அத்தகைய சூழலில் தைரியமிக்க உமர் (ரலி) அவர்கள் போன்ற சஹாபி ஆவேசமாக இருக்கும்போது, இந்த வசனம் அவர்களுக்கு ஆறுதல் தரவில்லை எனில் அவர்களின் கோபம் அணைந்தே இருக்காது. ஹஸ்ரத் ஈஸா உயிருடன் இருப்பதாக அன்னார் நம்பியிருந்தால் கருதியிருந்தால் உயிருடனேயே இறந்திருப்பார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வைத் தவிர வேறு எவரின் வாழ்வையும் அவர்களால் ஏற்கவே முடியாதிருந்தது. பிறகு எவ்வாறு தமது கண்ணுக்கு முன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மரணித்தவர்களாகக் காண்பார்கள். மஸீஹை உயிருடன் இருப்பதாக ஏற்பார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) குத்பாவை ஓதியதும் அவர்களின் வேகம் தணிந்தது. அப்போது சஹாபாக்கள் மதீனாவின் வீதிகளில் இந்த வசனத்தை ஓதியவாறு திரிந்தனர். அந்த வசனம் இன்றுதான் இறங்கியது என்று கருதினர். அப்போது ஹஸ்ஸான் பின் ஸாபித் ஒரு கவிதை எழுதினார். அதில் அவர் கூறினார்:

كُنْتَ السَّوَادَ لِنَاظِرِيْ فَعَمِيَ عَلَيْكَ النَّاظِرُ
مَنْ شَاءَ بَعْدَكَ فَلْيَمُتْ فَعَلَيْكَ كُنْتُ أُحَاذِرُ

அந்த மேற்கண்ட வசனத்தில் அனைவரும் இறந்து விட்டார்கள் என்று கூறப்பட்டு விட்டது. எனவே ஹஸ்ஸான் கூறினார்: எவரது மரணத்தைக் குறித்தும் பரவாயில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிரில் எவரது வாழ்வையும் குறித்து நம்புவதை அவர்களால் ஏற்கவே முடியாமல் இருந்தது என்பதைப் புரியுங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வஃபாத் வேளையில் முதல் ஏகோபித்த கருத்து உலகில் ஏற்பட்டது என்றால், அது மஸீஹ் (அலை) உடைய மரணம் குறித்ததாகவே இருந்தது.

(லெக்சர் லூதியானா, ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 260–262 & மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 224–227)

பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய பதவி மற்றும் அந்தஸ்து குறித்துக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் அக்தஸ்

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 03 Sep 2020 Issue No. 36

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

ஒரு மனிதன் சுயம் மற்றும் பண்புகள், செயல்கள், நடவடிக்கைகள், தனது ஆன்மீக ஆற்றல் என்ற வேகமான நதி ஆகியவற்றின் முழுமையான முன்மாதிரியை அறிவு ரீதியிலும், செயல் ரீதியிலும், உண்மையின் நிலையிலும், உறுதியாகவும் காட்டினார்களோ அவர்கள் முழுமையான மனிதன் என்று அழைக்கப்பட்டார்கள். எந்தக் கோணமும் இதற்கு வெளியில் இல்லை. அறிவு ரீதியிலும் செயல் ரீதியிலும் உண்மையான தரத்தின் அடிப்படையிலும் உறுதியான பாதத்திலும் சரி, அறிவு மற்றும் ஞானத்தின் அடைப்படையில் முழுமையான மனிதன் என்று அழைக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

அந்த மனிதன் எல்லாரிலும் முழுமையானவர்கள் ஆவார்கள். அவரே இன்சானே காமில் என்று அழைக்கப்பட்டார்கள். முழுமையான நபி ஆவார்கள். முழுமையான பரக்கத்துகளுடன் வந்தார்கள். அவர்களின் ஆன்மீக எழுப்புதல் மற்றும் ஒன்று கூட்டுதல் மூலம் உலகில் முதல் கியாமத் வந்தது. பெரும் மரணித்த உலகே அவர்களின் வருகையால் உயிர் பெற்றது. அதாவது அதற்கு ஆன்மீக வாழ்வு கிடைத்தது. அந்த அருளுக்குரிய நபி காத்தமுல் அன்பியா இமாமுன் அஸ்ஃபியா கதமுல் முர்ஸலீன் பகருன் னபிய்யீன் ஜனாபே முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

எனது அன்புக்குரிய இறைவா! அந்த அன்புக்குரிய நபியின் மீது ரஹ்மத் மற்றும் தரூது அனுப்புவாயாக. உலகம் தோன்றியது முதல் உலகில் எவருக்கும் அனுப்பாத அளவுக்கு அனுப்புவாயாக. இந்த மகத்தான நபி உலகில் வராவிட்டால் சின்னச்சின்ன நபிமார்களாக உலகில் தோன்றிய ஹஸ்ரத் யூனுஸ், அய்யூப், மஸீஹிப்னு மர்யம், மலாகி, யஹ்யா, ஸக்கரிய்யா போன்ற நபிமார்களின் உண்மைக்கு நம்மிடம் எந்த ஆதாரமும் இல்லை. இறை நெருக்கம் பெற்ற அந்த இருப்பு இறைவனது அன்புக்குரியது. அந்த நபியின் கருணையால் இந்த நபிமார்கள் உலகில் உண்மையாளர்களாகக் கருதப்படுகிறார்கள்.

اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَيْهِ وَاٰلِهٖ وَاَصْحَابِهٖ اَجْمَعِيْنَ وَاٰخِرُ
دَعْوَانَا اَنِ الْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ

(அத்மாமே ஹுஜ்ஜா, ரூஹானீ கஸாயின் தொகுதி 8 பக்கம் 308)

அல்லாஹ் எப்போதும் நம்மை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய மகத்துவம் மற்றும் தகுதி குறித்த உண்மையான புரிதிறன் உள்ளவனாக ஆக்கி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது தரூது அனுப்பிக் கொண்டே இருப்பவர்களாக்குவானாக. அல்லாஹ்வுக்கு முன்னர் முன்னரை விட அதிகமாக நாம் குனிபவர்களாவோமாக. நமது செயல் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நேசத்தை நிரூபித்து அதனை உள்ளத்தில் அமரச் செய்வோமாக. நாம் எதிரிகளின் எதிர்ப்புக்கு அதன் மூலம் பதில் தரும் தகுதியைப் பெறுவோமாக. நமது அமலின் நிலையே எதிரிகளின் எதிர்ப்புக்குப் பதில் தரட்டுமாக. அல்லாஹ் அதற்கான வாய்ப்பினை வழங்குவானாக.

......☆......☆......☆......

## திருக்குர்ஆனின் வாதம் என்னவென்றால், முந்தைய வேதங்களிலுள்ள அனைத்து உண்மைகளும் இதில் இடம் பெற்றுள்ளது

ஆட்சேபனை செய்வது மிகவும் எளிதான பணியாகும். இதனை ஒருவர் தனக்கு எதிரானவருக்கு எதிராக செய்ய முடியும். உண்மையை மறுக்கக் கூடியவர்கள் எப்போதும் ஆட்சேபனை மட்டுமே செய்யக் கூடியர்களாக இருக்கின்றனர். அதற்கு எதிராக அடையாளங்கள் வெளிப்படத்தக்க மற்றும் அவர்களது ஆட்சேபனையின் உண்மை நிலை வெளிப்படும் அளவிலான எந்தவொரு வலுவான பணியையும் அவர்கள் செய்வதில்லை.

திருக்குர்ஆனை மறுக்கக்கூடியவர்களின் நிலையும் இதுவே ஆகும். அவர்கள் திருக்குர்ஆன் மீது ஆட்சேபனை செய்தனர். ஆனால் இதற்கெதிரில் இதனை விட மேலான, இன்னும் சொல்வதென்றால் இதற்கு இணையான எந்தவொரு போதனையையும் அவர்கள் முன் வைக்கவில்லை. இன்று வரை திருக்குர்ஆனை எதிர்க்கக்கூடியவர்களின் நிலை இவ்வாறுதான் இருக்கிறது.

கிறித்தவ எழுத்தாளர்கள் திருக்குர்ஆனின் மீது ஆட்சேபனை செய்து கொண்டே செல்கின்றனர். ஆனால் இன்று வரை இதற்கு இணையான ஒன்றை கொண்டு வாருங்கள் என்ற கோரிக்கையை முழுமை செய்வதற்கு அவர்களிடம் தைரியம் இல்லை. இஞ்ஜீலின் இந்த தத்துவத்தை திருக்குர்ஆன் திருடி விட்டது. மேலும் தவ்ராத்திலிருந்து இந்த விஷயத்தை எடுத்துக் கொண்டது என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால் இஞ்ஜீல், தவ்ராத் ஆகிய நூல்களிலிருந்து கருத்துக்களை எடுத்து திருக்குர்ஆனைப் போன்ற முழுமை பெற்ற வேதத்தை உருவாக்குவதற்கு அவர்களிடம் தைரியம் இல்லை.

தேனீக்கள், பூக்களிலிருந்து நறுமணத்தையும், பழங்களிலிருந்து இனிப்பையும் திருடி விட்டது என்று மனிதன் தேன் மீது எளிதாக ஆட்சேபனை செய்து விடலாம். ஆனால் மனிதன் அதுபோன்ற தேனை உருவாக்கிக் காட்டும்போதுதான் அது சரி என்று கருதப்படும். நல்ல பொருட்களை பல்வேறு இடங்களிலிருந்து எடுத்து ஏதாவதொரு புதிய மற்றும் உயர் தரமான பொருளை தயார் செய்வது என்பது ஒரு மிகச்சிறந்த விஷயமாகும். ஆனால் இது எளிதான பணி என்றால் ஆட்சேபனை செய்யக்கூடியவர்கள் இதுபோன்ற பணிகளை ஏன் செய்து காட்டுவதில்லை?

திருக்குர்ஆனின் வாதம் என்னவென்றால், முந்தைய வேதங்களிலுள்ள அனைத்து உண்மைகளும் இதில் இடம் பெற்றுள்ளன

அல்லாஹ் கூறுகின்றான்: இதில் நிலைத்திருக்கக்கூடிய உண்மைகள் உள்ளன. அது காலத்திற்கேற்ப ரத்து செய்ய முடியாதவையாகும்.

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்: இந்த ரஸூல் உங்களுக்கு கற்றுக் கொடுப்பதை நீங்கள் இதற்கு முன் அறிந்திராதவராக இருந்தீர்கள். அதாவது இதிலுள்ள போதனை முந்தைய வேதங்களிலுள்ள நல்ல விஷயங்களை மட்டும் உள்ளடக்கியது கிடையாது. மாறாக, மேலும் அதிகப்படியான எத்தகைய விஷயங்கள் உள்ளன என்றால் முன்னுள்ளவர்களுக்கு அது பற்றி எதுவும் தெரியாது.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 1 பக்கம் 226 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சடிக்கப்பட்டது)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad